www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

குரல்: 56 சித்திரை 1995 அன்பளிப்பு: ரூபா 5/=

## உள்ளே


- சந்திரிகாவின் அசமந்தம்; பலத்த ஏமாற்றம் - கருத்து விளக்கம்
- மூன்றாவது ஈழப்போர் மூண்டுவிட்டது - உசாவல்
- இரண்டாவது ஈழப் போர் - ஆய்வுரை
- "தலைவரின் சிந்தனைகள்" - அறிமுகம்
- நேரடித் தாக்குதற் படைப்பிரிவு
- மக்களுக்கோர் பகிரங்க அறைகூவல்
- போர் முரசு கேட்கிறது போராடு - கவியுரை
- திருக்கோணமலை சிங்களக் குடியேற்றம்
- சந்திரிகா - மாயை கலைந்தது






எல்லோரும் ஏறின குதிரையில்...

"புலிகளுக்கு சமாதானத்தில் விருப்பம் உண்டு என நாங்கள் எந்த ஒரு வேளையிலும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. புலிகளின் பங்களிப்பு இல்லாமலும் நாம் சமாதானத்தைக் காணுவோம். சமாதானத்தில் சிறந்து விளங்கியதைப் போல எமது அரசு யுத்தத்திலும் சிறந்து விளங்கும்."

– சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா.

# மூன்றாவது ஈழப்போர் மூண்டுவிட்டது



'தேசத்தின் புயல்'களோடு 'புயலின் மையம்'; கையிலே தாங்குவது இலக்கின் உரு அல்ல; நெஞ்சிலே தேக்கிய இலட்சியத்தின் குறியீடு.

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# விடுதலைப் போருக்கு இறக்கை முளைத்துவிட்டது!

தமிழீழம் ஒருவித மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றது ஆண் – பெண் – இளைஞர் – வயோதிபர் என்ற பேதமில்லாமல் எல்லாரும், தத்தமது குடும்பங்களில் நடக்கும் கொண்டாட்டங்களின்போது மகிழ்ச்சியுடன் காணப்படுவதுபோல, மலர்ந்த முகத்துடன் உலாவருகின்றனர். எமது மக்களைக் கனவிலும் அச்சுறுத்திவந்த சிங்கள வான்கழுகுகள் இரண்டின் அழிவில், அந்த மகிழ்ச்சி பிறந்துள்ளது. தும்பி அடிப்பதுபோல அடுத்தடுத்து இரண்டு இராணுவ விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டமை, தமிழர்களைப் பொறுத்தளவில், கொண்டாட்டத்திற்கும் – மகிழ்ச்சிக்கும் உரியதே. எமது சக்திக்கு அப்பாற்பட்ட – எம்மால் தடுத்து நிறுத்த முடியாத – ஒரு போராயுதமாகவே இதுவரை காலமும் சிங்கள வான்படை விமானங்கள் இருந்தன. ஆனால், எல்லாவற்றையும் சாதித்துக்காட்டி தமிழர் மனங்களில் பிரளயங்களை ஏற்படுத்திவரும் தலைவர் பிரபாகரன், வான்போரிலும் ஒரு சாதனையைப்படைத்துவிட்டார். எங்களது வீடுகளை – எங்களது உறவுகளை நொடிப்பொழுதில் அழித்தபடி, வானில் 'இராஜ வலம்' வந்த சிங்களப் படை விமானங்கள், 'சிதறு தேங்காய் போல' எமது மக்களின் கண்முன்னாலேயே சிதறிக்கிடந்த காட்சி, தேசத்திற்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

இந்த நிகழ்ச்சியை, இரண்டு விமானங்கள் வெற்றிகரமாகச் சுட்டுவீழ்த்தப்பட்ட சம்பவங்களாக மட்டும் பார்க்க முடியாது; விடுதலைப் போரின் இறுதி வெற்றிபற்றிய அவநம்பிக்கைக் கருத்தும் சுட்டுவீழ்த்தப்பட்ட ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகவே, இதைக் கருத வேண்டும்.

தமிழீழத் தனி அரசுக்கான ஆயுதப் போராட்டத்தை தலைவர் பிரபாகரன் ஆரம்பித்து 20 வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. ஒரு கைத்துப்பாக்கியுடன் – உள்ளூரில் செய்யப்பட்ட ரவைகளையும் கொண்டு – ஒரு சில நண்பர்களின் துணையுடன், சிங்கள அரசுக்கு எதிராக அவர் விடுதலைப் போரைத் தொடுத்திருந்தார் என்பது, மக்களுக்குத் தெரியும். அப்போதிலிருந்து, புலிகள் இயக்கம் இராணுவரீதியாகச் சந்தித்த ஒவ்வொரு சிக்கலையும் பார்த்துவிட்டு, இதை எப்படிச் சமாளிப்பது? அதை எவ்வாறு வெற்றிகொள்ளப் போகின்றீர்கள் என்று, மக்கள் அவநம்பிக்கை தொனிக்கும் கேள்விகளை எழுப்பி வந்ததை இந்த இடத்தில் நினைவூட்ட வேண்டியது அவசியம்; ஆனால், ஒவ்வொரு தடையினையும் புலிவீரர்களைக் கொண்டு தலைவர் அவர்கள் உடைத்தெறிந்து காட்டியபோது, அடுத்ததை எப்படி வெல்லப் போகின்றீர்கள் என்று, கடந்த 20 வருட காலமாக, மக்கள் கேள்விமேல் கேள்வி எழுப்பிக்கொண்டே இருந்தனர். போராட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப கேள்விகளிலும் ஒரு வளர்ச்சி இருந்தது. ஒரு கட்டத்தில், விமானங்களை வீழ்த்தமுடியுமா என்ற கேள்வியும் எழுந்திருந்தது. இன்று அதற்குரிய ஒரு தெளிவான பதில் மக்களுக்குக் கிடைத்துவிட்டது; அதனால், தேசம் மகிழ்ச்சியில் குளிக்கின்றது.

பலம் – மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான். பூநகரி சிங்களப் படைமுகாம் மீதான வெற்றியைத் தொடர்ந்து புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட பலத்தால் மகிழ்ச்சி அடைந்த தலைவர் பிரபாகரன், ''11ஆம் திகதி (பூநகரி வெற்றிநாள்) ஒவ்வொரு புலிவீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன'' என்று பிரகடனப்படுத்தினார். பத்துக் கைகள் கொண்ட புலிவீரர்களுக்கு, 29 ஆம் திகதி, 'இரண்டு இறக்கைகளும் முளைத்துவிட்டன' என்று தமிழீழம் புளகாங்கிதம் அடைகிறது.

மூன்றாவது ஈழப்போரின் மூக்கணாங்கயிறு இப்போது புலிகள் இயக்கத்திடமே உள்ளது. இதைக் கெட்டியாகப் பிடித்தபடி, இந்த இராணுவ உயர்நிலையை நாங்கள் பாதுகாக்கவேண்டும். வெற்றிகளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்; ஆனால், அந்த மகிழ்ச்சியை நீடிக்கச் செய்ய எமது படைபலத்தை அதிகரிக்க வேண்டும். இளைஞர்களும் – இளம் பெண்களும் ஆயிரக்கணக்கில் வந்து புலிகள் இயக்கத்தில் இணைவதன் மூலம், தமிழரின் படைபலத்தை அதிகரிக்க முடியும்; அதன் மூலம் நிறைய வெற்றிகளை அடுத்தடுத்துக் குவிக்கமுடியும். பல கைகள் வடத்தைப் பிடிக்கும்போது, தேர் சுலபமாகவும் விரைவாகவும் நகரும்!

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

## பலத்த ஏமாற்றம்

நீண்ட பல வருடங்கள் தொடர்ச்சியாக நடந்த போரைத் தொடர்ந்து அமைதிச் சூழல் பிறக்கவும், அரசியல் தீர்வு ஏற்படவும் உருவாகிய ஒரு அரிய வாய்ப்பு, **சந்திரிகா அம்மையாரின்** இனவாத அணுகுமுறைகளாலும் தலைமைத்துவப் பலவீனங்களாலும் கை நழுவிப் போய்விட்டது. இதன் விளைவுகள் மூன்றாவது ஈழப் போரை ஆரம்பித்துவிட்டன.

தமிழரின் உரிமைப் போராட்ட வரலாற்றையும், போராட்டத்தை வழிநடாத்தும் தலைமையையும் சந்திரிகாவின் அரசு புரிந்துகொள்ள மறுத்ததால், மீண்டும் இரத்தம் சிந்தத் தொடங்கியுள்ளது.

உடன்பாடு கண்டதை நடைமுறைப்படுத்தும் நேர்மையும், ஒரு பல்லின அரசின் தலைமைக்குரிய இனச்சமத்துவப் பார்வையும் சந்திரிகா அம்மையாரிடம் இருந்திருந்தால், மூன்றாவது ஈழப்போர் தொடங்கியிருக்க மாட்டாது.

'காலத்தை இழுத்தடித்தல்' என்ற புளித்துப்போன உத்தியைப் பயன்படுத்தி, தமிழினத்திற்கு உரிமை வழங்குவதிலிருந்து தப்பிப்போகச் சந்திரிகாவின் அரசு முயன்றதே, மூன்றாம் ஈழப் போருக்கு அத்திவாரமிட்டது. மிக நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டுவரும் இந்தப் 'பழைய உத்தி'க்கு, முன்னைய தமிழ்த் தலைமைகளைப் போல புலிகளின் தலைமையும் பலியாகும் என, சந்திரிகா அரசு தப்புக்கணக்குப் போட்டது.

ஈழத்தமிழரின் வரலாற்றைப் பொறுத்தளவில், அரசியல் உடன்பாடுகள் காண்பது என்பது ஒன்றும் புதிய விடயம் இல்லை. சிலர் நினைப்பதைப் போல, சந்திரிகா அம்மையார் மட்டும்தான் தமிழருக்கு ஏதோ சிலவற்றைக் கொடுக்க முன்வந்த சிங்களத் தலைவர் என்றில்லை. முன்னரும் சில சிங்களத் தலைவர்கள் தமிழருக்கு சில உரிமைகள் கொடுக்க முன்வந்திருந்தார்கள். ஆனால், எழுதிய உடன்பாடுகளை நேர்மையுடன் நடைமுறைப்படுத்தாது தட்டிக் கழிப்பதும் - செய்த உடன்பாடுகளை மீறுவதும் - மீறிவிட்டுச் சாட்டுக்கள் சொல்வதும், சிங்களத் தலைமைகளின் மரபாகிவிட்டது. பண்டா - செல்வா உடன்படிக்கையில் இருந்து, இந்திய - இலங்கை ஒப்பந்தம் வரை இந்த மரபை, பல சந்தர்ப்பங்களில் கண்கூடாகக் காணலாம். இந்த மரபிற்கு சந்திரிகா அம்மையார் விரோதமானவர் என்பது உண்மையாக இருந்தால், அதை அவர் செய்து காட்டியிருக்கவேண்டும். அதற்குரிய கால அவகாசமும் - ஒத்துழைப்பும் அவருக்குப் போதிய அளவில் இருந்தது. ஆனால், சந்திரிகா அம்மையார் அதைச் செய்யவில்லை.

சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளை அப்படியே நம்பி - காத்திருந்து - பின் ஏமாந்த கதைகள் எம் முன்னே இருக்க, திரும்பவும் அதே தவறைச் செய்ய புலிகளின் தலைமை தயாராக இருக்கவில்லை.

நடைமுறைப்படுத்தலுக்குக் கடினமான ஒரு விடயத்திற்காகச் சிலகாலம் காத்திருப்பது தவிர்க்க முடியாதது; அது புலிகளின் தலைமைக்கு நன்கு தெரியும். ஏனெனில், செயல்திறனில் புலிகள் இயக்கத்திற்குச் சிறந்த அனுபவம் உண்டு. ஆனால், எமது மக்களின் அவசர-அன்றாடப் பிரச்சினைகளைத் ''தீர்த்து வைக்கின்றோம்'' என உறுதி அளித்துவிட்டு, அதைச் சரிவர அமுல்படுத்தாது காலத்தை இழுத்தடிப்பதை இளிச்சவாய்த்தனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று, புலிகள் இயக்கத்தை எவரும் கோரமுடியாது.

அமைதிச் சூழலை உருவாக்க முயன்ற கடந்த 4 மாதங்களிலும், புலிகள் இயக்கம் பற்றியும் தமிழ் மக்களது அவசரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் சந்திரிகா அம்மையார் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துக்கள், விவேகமானவையாக இருக்கவில்லை.

பகைமைகொண்டு போர்புரிந்த இரண்டு இனங்களின் தலைமைகள் ஒரே மேசையில் அமர்ந்து, பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க முயலும்போது, அந்த இனத்தின் தலைமைகளுக்கு இருக்கவேண்டிய நாவடக்கம், பண்பான அணுகுமுறைகள், 'சொல்லளவிலாவது' நட்புரிமை பாராட்டல் என்ற அடிப்படை இராஜதந்திரத் தகுதிகளைக்கூட சந்திரிகா அம்மையார் வெளிக்காட்டவில்லை. புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டே, பத்திரிகைகளிலும் பொதுக்கூட்டங்களிலும் தொலைக்காட்சியிலும் புலிகளைக் கீழ்த்தரமாக விமர்சிக்கும் தவறான மனோபாவத்தைச் சந்திரிகா அம்மையார் கொண்டிருந்தார். இது இரு பகுதியினருக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையைக் குலைப்பதாகவும் - தேவையில்லாது சீண்டும் சண்டித்தனமுமாகவே இருந்தது.

ஆனால், மறுவளமாக, பேச்சுவார்த்தை முறியும் நிலை தோன்றிய கடைசி நொடிப் பொழுதுவரை, சந்திரிகா அம்மையாரை அல்லது அவரது அரசை விமர்சித்து, புலிகளின் தலைமை வார்த்தைக் குண்டுகளை வீசவில்லை. பதிலாக, சந்திரிகாவைப் புகழ்ந்து - அவரது சமாதான முயற்சியை ஊக்கப்படுத்தும் வார்த்தைகளையே புலிகளின் தலைமைப்பீடத்தினர் தெரிவித்துவந்தனர். அரசியல் ரீதியாக சந்திரிகாவின் அரசை விமர்சிக்கும் அவசியம் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நிதானமான முறையில் - பண்பான சொற்களைப் பயன்படுத்தியே, புலிகளின் தலைமை அரசியல் விமர்சனங்களை முன்வைத்தது.

பேசும் முறையும் - பேசும் பண்பும் சந்திரிகா அம்மையாருக்குத் தெரியாது என்று எவரும் கூறமுடியாது. அப்படியாயின், தமிழரின் உரிமைபற்றிய பேச்சு எழும்போதும் புலிகள் இயக்கம் பற்றிய கதை வரும்போதும் மட்டும், சந்திரிகா அநாகரிகத்தைக் கடைப்பிடிப்பது ஏன் ?

சிங்கள அரசின் தலைவர்களுக்கே உரித்தான பேரினவாதப் பார்வையும், தமிழ் இன விரோத உணர்வும்தான் அதற்குக் காரணங்கள். சிங்களப் பேரினவாதபூதத்திற்குச் சவாலாக எழுந்துவிட்ட புலிகள் இயக்கம் பற்றிய பேச்சு எழும்போது, எந்தச் சிங்களப் பேரினவாதிக்கும், கோபமும் எரிச்சலும் வரத்தான் செய்யும்; அது, சந்திரிகா அம்மையாராக இருந்தாலும் சரிதான், ஏன், ராகுல தேரர் ஆக இருந்தாலும் சரிதான், சிங்கள தொடர்புசாதனங்களின் ஆசிரியர்களாக இருந்தாலும் சரி தான்......!

www.eelamview.com

www.eelamview.com



# எல்லாரையும் எல்லா வேளையும் ஏமாற்ற முடியாது!



சந்திரிகா அம்மையாரின் அண்மைக்காலப் பேச்சுக்களைப் பார்க்கும்போது, முதுபெரும் இனவெறியன் ஜே. ஆர். ஞாபகத்திற்கு வருவதைத் தடுக்கமுடியாதுள்ளது.

**சமாதான முகமூடி அணிந்த பேரினவாதிதான் சந்திரிகா** என்று, கடந்த **விடுதலைப் புலிகள்** இதழில் வெளியிட்ட கருத்தை, அவரே படிப்படியாக உறுதிப்படுத்தி வருகின்றார். புலிகள் இயக்கம் அவர்பற்றிய எதிர்வுகூறலை மிகச் சரியாகவே செய்துள்ளது.

சந்திரிகா அம்மையார் அவர்களுக்கு, தேர்தல் காலத்தில் அவர் கூறித்திரிந்ததுபோல, சமாதானம் தேவைப்பட்டிருக்கவில்லை. அவருக்கு ஜனாதிபதி பதவிதான் தேவைப்பட்டது. அந்தப் பதவியைப்பெற **சமாதானப் பேச்சு** என்ற தந்திரோபாய நிலைப்பாட்டை எடுத்து, அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். அதன்பின்னர், காலாவதியான அந்தத் தந்திரோபாயத்தை (பேச்சுவார்த்தை) தூக்கியெறிவதற்காக பின்வரும் சில உத்திகளை வகுத்தார்.

'உருப்படியாக எதையும் செய்யாது காலத்தை இழுத்தடித்தல்', 'சாமானியர்களைப் பேச்சிற்கு அனுப்புதல்', 'பேச்சு முறிவடையக்கூடிய சூழல்களை உருவாக்குதல்.'

அவர் வகுத்த உத்திகளும் வெற்றிகரமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு - அவர் விரும்பியபடியே போரும் ஆரம்பித்துவிட்டது.

போர் ஆரம்பித்த கையோடு, ஒளிவு மறைவு இல்லாமல், சந்திரிகா அவர்கள் தனது உள்மனதை - தனது பேரினவாத முகத்தை - திறந்துகாட்ட ஆரம்பித்துவிட்டார். இந்தவகையில் சந்திரிகாவின் ''நேர்மைக்கு'' எமது நன்றிகள்.

**இந்த வேளையில், எமது மக்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது, நாங்கள் எல்லாருமே நம்பியதுபோல, சந்திரிகா அம்மையார் ஒரு சமாதான விரும்பி அல்ல; பதிலாக...... ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் போல அல்லது லலித் அத்துலத்முதலியைப் போல அல்லது காமினி திசநாயக்கா போல, சந்திரிகா அம்மையாரும் ஒரு பேரினவாதத் தலைவரே ஆவார்!**

பேச்சுவார்த்தைக் காலத்தில், தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றின் மீதான தடையை நீக்குவதாக அறிவிப்புச்செய்துவிட்டு, இதைச் சரியாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் தேவை என்று சாட்டுக்கள் கூறி, சட்டப்படி அதை வர்த்தமானியில் வெளியிடுவதையும் ''கெட்டித்தனமாக'' தவிர்த்தார். ஆனால், போர் தொடங்கிய அடுத்த கணம், தடை நீக்கிய பொருட்களுக்கும் தடைவிதித்து, உடனடியாகவே வர்த்தமானியிலும் பதிந்து, எந்தவித நடைமுறைப் பிரச்சினைகளும் இல்லாது, சரியாகவும் விரைவாகவும் அதைச் சந்திரிகா நடைமுறைப்படுத்தினார். அவரது 6 மாத ஆட்சிக் காலத்தில் அவர் மிக வேகமாகச் செயற்பட்டது இந்த இடத்தில்தான் என்று கூறலாம்.

தமிழ் மக்களுக்குக் கொடுக்கும்போது ''நடைமுறைப் பிரச்சினை'' என்றும் ''கால அவகாசம் தேவை'' என்றும் கூறும் சந்திரிகா, அவர்களுக்குக் கொடுத்ததைப் பறிக்கும்போது, மின்னலுக்கும் முழக்கத்திற்குமிடையிலான நேரமே எடுத்தார்.

இதை எப்படி அழைப்பது? தமிழின விரோத மனப்பான்மை என்பதா அல்லது தமிழ் மக்களுக்கு உதவ முயன்ற உத்தமி என்பதா?

தமிழ் மக்களுக்குச் செல்லும் பொருட்களுக்குத் தடையும் விதித்துவிட்டு, சந்திரிகா அவர்கள் 25. 04. 1995 இல் கூறினார், ''தடையில்லாப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்குக்கூட இராணுவம் அனுமதிக்கும் என உத்தரவாதம் அளிக்கமுடியாது.'' இந்த வார்த்தைகளை சந்திரிகாவின் திமிர்த்தனம் என்பதா அல்லது தமிழ் மக்கள் மீதான வெறித்தனம் என்பதா!

தமிழரின் அரசியல் அரங்கிலிருந்து புலிகளை அப்புறப்படுத்தும் எண்ணத்துடன், புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்து, தமிழ் மக்களது மனதில் நச்சு விதைகளை விதைக்கும் ஒரு சூழ்ச்சிகரத் திட்டத்தை - எல்லாரும் செய்ய முற்பட்டதைப்போலவே - சந்திரிகாவும் செய்ய முற்பட்டார்; வெற்றுச் சொற்களாலும் பசப்பு வார்த்தைகளாலும் அதைச் சாதிக்க முயன்றார்.

தமிழ் மக்களுக்கு தனது அரசு உதவக் காத்திருக்கின்றது என்று வாஞ்சையுடன் அறிக்கைகளை விடும் சந்திரிகா அவர்கள், போர் தொடங்கியதும், தமிழ் மக்களின் ஒரேயொரு பயணப் பாதையான கிளாலிப் பாதையைத் தடைசெய்யும் அறிவிப்பை வெளியிட்டுவிட்டாரே! இது ஏன்? புலிகளின் பயணத்தைத் தடைசெய்வதற்கே இந் நடவடிக்கை என்று அரசு அறிவிப்பும் செய்துள்ளது. கிளாலி ஊடான புலிகளின் பயணத்தைத் தடுக்கும் சக்தி அரசுக்கு ''இல்லை'' என்பது உலகிற்கே தெரியும். அப்படியாயின், கிளாலிப் பயணத் தடை யாருக்கு எதிரானது? அது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல என்று அரசு விடும் அறிவிப்பை நம்பிக்கொண்டிருக்க, தமிழ் மக்கள் ஒன்றும் அரசியற் குருடர்கள் அல்லவே!

தமிழ் மக்கள் தமது உற்றாரையும் உறவினர்களையும் பார்த்துப் பேசவும், தமது அன்றாட ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ளும் ஒரு மார்க்கமாகவும் இருக்கும் கிளாலிப் படகுப் பயணத்தைத் தடைசெய்திருக்கும் சந்திரிகா அரசிடம், தமிழர்களுக்கு எதிரான உணர்வு எந்தளவில் உள்ளது என்பதை, வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

**இந்த வேளையில் எமது மக்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது நாங்கள் எல்லாருமே நம்பியதுபோல, சந்திரிகா அம்மையார் ஒரு சமாதான விரும்பி அல்ல ; பதிலாக......ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் போல அல்லது லலித் அத்துலத் முதலியைப் போல அல்லது காமினி திசநாயக்கா போல, சந்திரிகா அம்மையாரும் ஒரு பேரினவாதத் தலைவரே ஆவார்!**

25. 4. 95 அன்று, ரூபவாஹினியில், சந்திரிகா குமாரதுங்க அவர்கள் 'செவ்வி' காணப்பட்டார். '' வடபகுதி மக்களுக்கு நீங்கள் தெரிவிக்கும் செய்தி என்ன? '' என்ற கேள்விக்கு, '' முதலில் தென்பகுதி மக்கள் எமக்களித்த ஆதரவுக்கு நன்றி கூற வேண்டும் '' என்று பதிலளிக்கத் தொடங்கி, சிங்கள மக்களை முதன்மைப்படுத்தித் தனது கருத்தைக் கூறியுள்ளார். '' யாழ்ப்பாண மக்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை '' என்று, 1982 ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனா பகிரங்கமாகத் தெரிவித்த இனவாதக் கருத்தை, சந்திரிகா மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

இதே தொலைக்காட்சிச் செவ்வியில் கேட்கப்பட்ட இன்னொரு கேள்விக்கு, '' சிங்கள இளைஞர்களைக் கொன்றவர்கள் '', '' சிங்களத் தலைவர்களைக் கொன்றவர்கள்'', '' கொழும்புக்கு வந்து குண்டுகளை வெடிக்க வைத்தவர்கள் '' என்று ... புலிகள் இயக்கம் மீது அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்தும் அம்மையார் அவர்கள், தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கும், தமிழ்ப் பெண்கள் பாலியல் வதைகளுக்கு உட்படுத்தப்பட்டதற்கும், ஆகாய - கடல் தாக்குதல்மூலம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், தமிழ் மக்களின் நிலங்கள் வன்கவர்வு செய்யப்பட்டதற்கும் யாரைக் குற்றம்சாட்டப்போகின்றார்? தமிழர்கள் அழிக்கப்படும்போது புலிகள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டும் என்று சந்திரிகா போதிக்கிறாரா? அல்லது சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் மட்டும்தான் மனித உயிர்கள் - அவர்களது இழப்புக்குத்தான் கவலைப்பட வேண்டும் - '' தமிழர்கள் பற்றி எனக்குக் கவலை இல்லை '' என்று, ஜே. ஆரின் பாணியில் சந்திரிகாவும் நினைக்கின்றாரா? அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சிந்தனைக் கருவூலமான மகாவம்சத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல - இன்றும் சிங்கள மாணவர்களுக்கு பாடசாலையில் போதிக்கப்படுவது போல - ''தமிழர்களைக் கொன்றால் சொர்க்கத்திற்குப் போகலாம் '' என்ற போதனை, சந்திரிகாவின் மனதை நிறைத்துள்ளதோ! அல்லது, **'கொன்றவர்களைக்' கொல்லும் நிலைக்கு இன்று வளர்த்துவிட்ட** காரணத்தால் புலிகளைச் சந்திரிகாவுக்கு பிடிக்காமல் இருக்கலாம்.

''தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் புலிகள் இயக்கத்துடன் காண்பது கடினம்'' என, அச் செவ்வியில் சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார். இதனுடைய அர்த்தம் என்ன? புலிகள் இயக்கத்துடன் பேசி அரசியல் தீர்வு காண்பது என்பது கடினமா? அல்லது புலிகள் இயக்கத்தை ஏமாற்றி 'அரசியல் தீர்வு' என்ற போர்வையில் தமிழ் இனத்தை அடிமைகொள்வது கடினமா?

சந்திரிகா அம்மையார் அவர்களே! சமாதான வழிமுறையில் தமிழ் இனத்திற்கு அரசியல் தீர்வை வழங்க நீங்கள் விருமபவில்லை என்பதை, சமாதானப் பேசசுக்களில் நீங்கள் காட்டிய அசிரத்தையும் - அலட்சிய மனோபாவமும் புலப்படுத்துகின்றன. பேச்சு முறியபபோகின்றது என்ற ஒரு இக்கட்டான நிலை எழுந்தபோதுமகூட மதகுருக்களையும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களையுமே பேச்சுக்கு அனுப்பி, பேச்சுவார்த்தை மீதான உங்களது ''அக்கறை''யைக் காட்டிவிட்டீர்கள்! மேலைநாடுகள் சிலவற்றைக்கொண்டு புலிகளுக்கெதிரான கண்டன அறிக்கைகளை விடுக்கச்செய்து, புலிகளின் தலைமையைப் பணியச்செய்துவிடலாம் என்று எண்ணாதீர்கள். அந்தக் கண்டன அறிக்கைகளுக்குப் பின்னால் உள்ள 'அரசியல்' புலிகள் இயக்கத்திற்கு நன்கு பழக்கமானது. சர்வதேச அழுத்தத்திற்காக எமது மக்களின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுக்க, புலிகள் இயக்கம் என்றுமே முயலமாட்டாது. ○

www.eelamview.com

www.eelamview.com




# மூன்றாம் ஈழப்போரின் பின்னால்...

விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளும் பூரணமாக நிறைவேற்றப்படாமைதான் '3ஆவது ஈழப்போர்' மூண்டதன் உடனடிக் காரணமாக இருப்பினும், இன்னும் ஆழமாக நோக்குமிடத்து, கடந்த நாற்பதாண்டு காலமாக வேரோடிப் போயிருக்கும் சிங்களப் பேரினவாதச் சிந்தனைப் போக்கே அதன் அடிப்படைக் காரணம் என்பது புலனாகும்.

'3ஆவது ஈழப்போர்' தவிர்க்க முடியாததாக மூண்டமைக்கான பின்னணியை விரிவாக அறிய விழையும் எவருக்கும், இலங்கை அரசியற் களத்தில் கடந்த 6 மாத காலமாக நிகழ்ந்த நகர்வுகளின் பின்னணியைத் தெளிவாக விளங்கிக்கொண்டால் ஒழிய, அது சிரமமானதே.

நியாயமான அரசியல் தீர்வொன்றை வழங்க விரும்பாமை, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமை, காலத்தை இழுத்தடித்தமை, பேரினவாதச் சிந்தனையைக் கொண்டிருந்தமை, போருக்குப் படைகளைத் தயார்ப்படுத்தியமை போன்ற சந்திரிகா அரசினரின் செயற்பாடுகளிலிருந்து-

அரசின் கபட நோக்கத்தைப் புரிந்துகொண்டமையால், மீண்டும் யுத்தத்தின் பாதையில் செல்வது, புலிகள் இயக்கத்தைப் பொறுத்தளவில் தவிர்க்க முடியாமல் போய்விட்டது என்பதே உண்மையாகும்.



**பேச்சுவார்த்தைகள்: திரைமறைவில் சதி**

*இராணுவத் தீர்வை நாடும் சதிநோக்கத்தை நிறைவு செய்வதற்கான மூலத் தந்திரோபாயமாக, சந்திரிகா அரசு காலத்தை இழுத்தடித்தது.*

## நிபந்தனைகள் அல்ல; நிரல்படுத்தல்.

தமிழ் மக்களின் நாளாந்த சீவியத்தின் மீது சிங்கள அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடையூறுகளும், விதிக்கப்பட்டிருக்கும் தடைகளும் நீக்கப்படாத ஒரு நிலையில் - மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் போது - பேச்சு மேசையில் கூடியிருந்து சல்லாபித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை என்ற தமது நிலைப்பாட்டை -

முதலாவது சுற்றுச் சந்திப்பிலேயும், அதற்குப் பின்னான சந்திப்புக்களிலும் புலிகள் இயக்கம் ஆணித்தரமாக வலியுறுத்தியது.

முதலில் **அன்றாடப் பிரச்சினை**களுக்குத் தீர்வு காண்பது எனவும் பின்பு **அரசியல் பிரச்சினை**களை ஆழமாக அலசி ஆராய்ந்து தெளிவான முடிவொன்றைக் காணலாம் எனவும் புலிகள் முன்வைத்த கருத்தினை, அரசாங்கத்தினரும் ஏற்றுக் கொண்டபோது -

அவர்களது ஒப்புதலுடனேயே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்சொன்ன இரு கட்டங்களாகவும் வகைப்படுத்தப்பட்டன; ஒழுங்கமைக்கப்பட்டன. இந்த நிரல்படுத்தலின்படிதான் - அன்றாடப் பிரச்சினைகள் என்ற தலைப்பின் கீழ் - புலிகளின் கோரிக்கைகளில் மூன்று இடம்பெறுகின்றன.

பூநகரியிலிருந்து படைத்தளத்தை நீக்கி, யாழ்ப்பாண மக்களுக்கு நிரந்தரமானஒரு **போக்குவரத்துப் பாதை**யினைத் திறப்பதுடன், **பொருளாதாரத் தடையையும் கடல்வலயத் தடை**யையும் முழுமையாகவே நீக்கி, வடபகுதி மக்களின் இயல்பு வாழ்வை உறுதிப்படுத்துமாறு, விடுதலைப்புலிகள் கோரியதானது-

அரசாங்கத்தினருடன் ஏற்கெனவே காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு உட்பட்டதேயன்றி - அவர்கள் ஒத்துக்கொண்டதன் பாற்பட்டதேயன்றி - அதற்கு முரணானதல்ல. எந்த வகையிலும் புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவையுங்கூட.

எனினும், அந்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் மெல்லத் தளம்பியது; தடம் மாறியது. மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணுவதில் பின்னடித்தது; வேண்டுமென்றே இழுத்தடித்தது; தமிழ் மக்களின் நலன்களில் எவ்வித அக்கறையுமற்ற தன்மையை வெளிப்படையாகவே இனங்காட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக பேச்சுவார்த்தைக்கான பழைய நிரல்படுத்தலை, ''புலிகள் இயக்கத்தின் புதிய நிபந்தனைகள்'' என அது உரைத்தது. அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு விடுதலைப் புலிகள் தொடர்ந்து வலியுறுத்திய போது, ''ஆரம்பத்தில் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்று சொன்ன புலிகள், இப்போது பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையிடுகின்றார்கள்'' என அரசு அபாண்டமாகக் குற்றம் சாட்டியது. அன்றாடப் பிரச்சினையைத் தட்டிக்கழித்தது.

## அரசியற் பேச்சுக்களில் நாட்டம்

இத்தகைய குற்றச்சாட்டுகளை புலிகள் மீது சுமத்திக்கொண்ட அரசாங்கமானது, அரசியற் பிரச்சினைகளைப் பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு புலிகளுக்கு அழைப்பு விடுக்கத் துவங்கியது; அதனை அவசரப்படுத்தியது. இரு பிரச்சினைகளையுமே சமகாலத்தில் பேசித் தீர்வு காணுவோம் எனச் சாட்டுச் சொன்னது.

எனினும், புலிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்தனர். அதற்கு அவர்கள் மிகத் தெளிவான விளக்கத்தையும் கொடுத்தனர்.

ஏற்கெனவே எமது மக்கள் நிறையத் துன்பப்பட்டுப்போனார்கள். நான்காண்டு காலமாக போரின் சுவாலைகளுக்குள் அவர்கள் வதங்கிப்போயுள்ளார்கள். நாளாந்த சீவியத்தைப் போக்கவே அவர்கள் பட்ட கஷ்டங்களும் வேதனைகளும் சொற்களினால் விவரிக்க முடியாதவை. இந்த நிலையில் அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது, நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலைதான். அரசியற் பிரச்சினையே அடிப்படைக் காரணியாக இருப்பினும், அதன் விளைவாக முளைவிட்ட அன்றாடப் பிரச்சினைகளால்தான் இன்று, அளவுக்கு அதிகமாக மக்கள் அவலப்பட்டுப்போய் நிற்கின்றார்கள். எனவே, அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அன்றாடப் பிரச்சினைகளே முதலில் தீர்க்கப்படவேண்டும். அரசியற் பிரச்சினையோடு ஒப்பிடும்போது, அவை மிகமிகச் சாதாரணமானவையுங்கூட. ஆனால், அரசியற் பிரச்சினை அப்படியானதல்ல. அது ஆழமானது; அகலமானது; சிக்கலான பரிமாணங்களைக் கொண்டது; படை, அரசு, நிலம், நிர்வாகம், சட்டம் என்றவாறாகப் பல கூறுகளைக் கொண்டது. ஆகவே, அரசியற் பிரச்சினை என்பது மிகச் சிக்கலானது. அதன் ஒவ்வொரு பகுதியும் தனித்தனியாக அலசப்படவேண்டியது. அவை ஆழமாக ஆராயப்பட்டு தீர்வுகாண வேண்டியவை. இவை உடனடியாகச் சாதித்துவிடக்கூடிய காரியங்களல்ல. இவற்றை ஆறுதலாகப் பேசி நிரந்தரமான தீர்வுக்கான ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும், மிகமிக நீண்ட காலம் செல்லும் என்பது வெளிப்படையான விபரம். இதுவரை சொல்லொணாக் கஷ்டங்கள் பட்ட மக்கள் தொடர்ந்தும் துன்பத்துக்குள்ளாக, தாம் அனுமதிக்க முடியாது என்பதைப் புலிகள் தெளிவுபடுத்தினர்; எனவே, அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்க்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால், சந்திரிகாவின் அரசாங்கமோ அதில் அக்கறையற்று இருந்தது; அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தபடி அசிரத்தையாக இருந்தது. அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைத் தாமதப்படுத்தியது; காலத்தை இழுத்தடித்து நாட்கடத்தியது; மாறாக, அரசியற் பிரச்சினைகளைப் பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு நயவஞ்சக நோக்கத்துடன் அவசரப்படுத்தியது.

இவ்வளவும் பழைய கதை; உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்படையாகவே தெரிந்த சங்கதி. எல்லாருமே இவற்றை அறிவார்கள். ஆனால், சந்திரிகாவின் அரசாங்கமானது, அன்றாடப் பிரச்சினைகளை இழுத்தடித்துக்கொண்டு, அரசியற் பேச்சுக்களை ஆரம்பிக்க அவசரப்படுத்தியதன் பின்னணியை விரிவாக ஆராயும்போதுதான் -

'3ஆவது ஈழப்போர்' ஆரம்பிப்பதை புலிகளுக்குத் தவிர்க்க முடியாததாக ஆக்கிய ஏது நிலைகளும், காரணிகளும் புலனாகும்.

## சந்திரிகா அரசின் சதிநோக்கம்

அரசு அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பின்னடித்தமைக்கும், அரசியற் பிரச்சினைகளைப் பேச அவசரப்பட்டமைக்கும் இடையில்நெருங்கிய தொடர்பு உண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைகளை இராணுவத் தீர்வு நோக்கித் தள்ளிச்செல்லும் தனது சதிநோக்கத்தை எய்துவதற்கான தந்திர நகர்வின் ஆரம்ப அசைவுகளாக, இவ்விரண்டையும் அரசு செய்தது.

புலிகள் இனங்காட்டிய அன்றாடப் பிரச்சினைகளை அவர்களின் நிபந்தனைகளாகக் காட்டி, அரசியற் பேச்சுக்களுக்கு வருமாறு வற்புறுத்தி, பின்பு, புலிகள் சரிவர மாட்டார்கள் என்று பிரசாரம் செய்து, உலகிற்கு தன் பக்கம் அனுதாபம் வரச் செய்து, சர்வதேச உதவிகளைப் பெற்று, படை அமைப்பைப் புனருத்தாரணம் செய்து, அரசியற் பேச்சுக்கு ஒத்துழைக்காததால் இராணுவ வழிமுறையே புலிகளுக்கு உகந்தது எனச் சொல்லி, மீண்டும் போரைப் பிரகடனப்படுத்துவதுதான் சந்திரிகாவின் திட்டமாக இருந்தது.

## காலத்தை இழுத்தடிக்கும் தந்திரம்

இராணுவத் தீர்வை நாடும் தனது சதிநோக்கத்தை நிறைவு செய்வதற்கான மூலத் தந்திரோபாயமாக, சந்திரிகாவின் அரசு, காலத்தை இழுத்தடிப்பதைக் கையாண்டது. 'காலதாமதம்' என்ற ஆயுதம் மூலம் தனது சதிநோக்கத்தை நிறைவேற்றத் திட்டமிட்டது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில், பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த புலிகள் சம்மதிக்கவே மாட்டார்கள் என்பதில், அரசுக்கு எந்த ஐயப்பாடுமே இருக்கவில்லை. அத்தோடு, மீண்டும் தான் போரைப் பிரகடனப் படுத்துவதற்கு இடையில் - அமைதி நிலவுகின்ற இந்தக் கொஞ்சக் காலத்திற்குள்ளே - தமிழ் மக்களுக்கு சொற்ப சலுகைகள் தன்னும் கிடைத்துவிடுவதையும் அரசு விரும்பவில்லை. மேலும், மீண்டும் போர் துவங்கும் நோக்கம் இருக்கும்போது - மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக- தனது படைகளின் போரியல் தந்திரங்களைக் கைவிடவும் அது தயாராக இல்லை. இவை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

பரீசில் நடைபெறவுள்ளசிறீலங்காவுக்கு உதவும் நாடுகளின் மாநாட் →

www.eelamview.com

www.eelamview.com



டின் மூலமும் (ஏப்ரில் 28), 'சார்க்' அமைப்பு நாடுகளின் மாநாட்டின் மூலமும் (மே 02) மீண்டும் போரைத் துவங்குவதற்கான உகந்த நிலையை சர்வதேச ஆதரவுடன் உருவாக்கும் வரை - அன்றாடப் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட மேற்சொன்ன விடயங்களைத் தனக்குச் சாதகமாகக் கையாளுவதற்காகவே, அரசாங்கம் காலம் கடத்தும் வழிமுறையினைக் கையாண்டது எனலாம்.

இதே வேளையில் - அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய தமது கோரிக்கையை தற்செயலாகப் புலிகள் விட்டுக் கொடுக்க முன்வந்து அரசியற் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய களநிலை உருவாகிவிடுமானால் -

அன்றாடப் பிரச்சினைகளில் காலத்தை இழுத்தடிக்கும் தனது தந்திரோபாயம் செயலிழந்துபோனால்கூட, வெளிநாட்டு மாநாடுகளில் பயன்படுத்தவென அவர் மாற்றுவழிகளையும் வைத்துக்கொண்டுதானிருந்தார்.

## சர்வதேச ஆதரவு

அன்றாடப் பிரச்சினை பற்றிய புலிகளின் அழுங்குப்பிடியும், அதைத் தட்டிக்கழிக்கும் அரசின் கால இழுத்தடிப்புமாக, ஒரு இழுபறியான சூழ்நிலை நிலவும்போது அவ்விரு மாநாடுகளும் நடைபெறுமானால் -

புலிகளின் மீது அவப்பெயரை உண்டுபண்ணி, தன் மீது நற்பெயரை ஏற்படுத்தும் விதமாக, தனது செயற்பாடுகளை நியாயம் கற்பிக்கும் களங்களாக அந்த மாநாட்டு மண்டபங்களைப் பயன்படுத்தவே சந்திரிகா தீர்மானித்திருந்தார். அவர் ஏற்கெனவே, செவ்விகளிலும் உரைகளிலும் குறிப்பிட்டதைப் போல, "புலிகளுக்கு சமாதானத்தில் நாட்டமில்லை. எமது அரசு எவ்வளவோ சலுகைகளை வழங்கியபோதும், பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகளைப் போட்டு சமாதான முயற்சிக்கு அவர்கள் தடையாக நிற்கின்றார்கள். ஒவ்வொரு சுற்றுச் சந்திப்பின்போதும் ஒவ்வொரு புதிய நிபந்தனையை விதிக்கின்றார்கள். அந்த நிபந்தனைகள் மிகவும் சிக்கலானவையாக இருக்கின்றன; நாட்டின் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம்விளைவிப்பவையாக உள்ளன. அரசியற் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அவர்களுக்குச் சம்மதமில்லை. அரசியற் பேச்சுக்களை ஆரம்பித்தாலே, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இவ்வாறாக-அமைதி வழியில் சமாதானம் காணும் எனது முயற்சிக்கு இடையூறு தந்து புலிகள் தடையாக உள்ளார்கள். எனவே, அவர்களைப் புறந்தள்ளி விட்டு பிரச்சினைக்குத் தீர்வு தேட நான் நிர்ப்பந்திக்கப்படலாம்" என்றவாறாக, தன்னை நியாயவாதியாகவும், புலிகளைக் குற்றவாளிகளாகவும் காட்டி - தனது இராணுவத் தீர்வு நோக்கிய சிந்தனையை மறைமுகமாக வெளிப்படுத்தி - அனைத்துலக ஆதரவைத் தன் பக்கம் ஈர்த்துக்கொள்ளவே அவர் உத்தேசித்திருந்தார்.

இவ்வாறான ஒரு இராஜதந்திர நகர்வினைக் கையாண்டு, சர்வதேச நாடுகளின் உதவிகளையும், தார்மீக ஆதரவையும் நிறைந்த அளவில் பெற்றுக்கொண்டதன் பின்னர், நேரடியாகவே யுத்தத்தைப் பிரகடனப்படுத்தும் கபட உள்நோக்கத்தையே அவர் கொண்டிருந்தார். அந்த யுத்தத்திற்கு, "சமாதானத்திற்கான போர்" என்ற பெயர் சூட்டவும் அவர் காத்திருந்தார்.

இவ்வாறாக இல்லாமல் -

எதிர்பாராதவிதமாக அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய தமது இறுக்கத்தைத் தளர்த்தி, புலிகள் இயக்கம் திடீரென அரசியல் பேச்சுக்களுக்குச் சம்மதம் தெரிவிக்குமானால் -

அப்போது தோன்றக்கூடிய ஒரு பாரதூரமான சூழ்நிலையையும் அனைத்துலக மட்டத்தில் தனக்குச் சார்பாக மாற்றியெடுக்க, சந்திரிகா அரசு ஒரு உத்தியை வைத்துக் கொண்டுதானிருந்தது.

## சமாதானத்திற்கான போர்

அரசியற் பேச்சுக்களை ஆரம்பித்தால், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை உடனடியாக வெளியிட வேண்டும். ஆனால், தான் தயாரிக்கவுள்ள தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யாததாகவே இருக்கப் போகின்றது. அதனால், புலிகள் இயக்கம் அதனை நிராகரித்துத் தூக்கியெறியும் என்பதில் அவருக்கு எவ்வித ஐயப்பாடுமே இல்லை. உப்புச் சப்பற்ற அந்தத் தீர்வுத் திட்டத்தினால், பேச்சுவார்த்தைகளில் குழப்பமேற்படும். 'இதற்கு மேல் எதுவும் தர முடியாது' என்னும்போது, 'பிரயோசனமற்ற வேலை' என்று புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை முறித்துவிடலாம்; மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்து விலகலாம்; மீண்டும் போர் வெடிப்பது தவிர்க்க முடியாததாகலாம்.

இவ்வாறாக, சமாதானப் பேச்சுக்கள் முறிந்து போர் தொடங்கிவிடும் ஒரு சூழ்நிலையில் அவ்விரு வெளிநாட்டு மாநாடுகளும் நடைபெறுமானால் - அந்த மாநாட்டு மண்டபங்களில் - ஏற்கெனவே செவ்விகளிலும் உரைகளிலும் தான் தெரிவித்திருப்பதுபோல, பின்வருமாறு கூறச் சந்திரிகா திட்டமிட்டிருந்தார்.

"புலிகள் இயக்கத்திற்கு நாம் அதிக சலுகைகளை ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். எமது தீர்வுத் திட்டத்தில் தமிழர்களுக்கு போதுமான அளவு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் திருப்திப்படுகிறார்களில்லை. தமிழர்களுக்காக நாம் ஏனைய மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது. சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, எந்த விலையையும் கொடுத்து சமாதானம் காண வேண்டும் என்றில்லை. அமைதி வழியில் தீர்வுகாண நாம் எல்லா வழிகளிலும் முயற்சி செய்தோம்; இயலக்கூடிய அளவுக்கு விட்டுக் கொடுத்தோம். ஆனால் முடியவில்லை. அதனால், நாம் இராணுவ ரீதியில் சமாதானத்தைக் காண நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இப்போது நடப்பது 'சமாதானத்திற்கான போர்'. புலிகள் ஒரு ஆயுதக் குழுவினர்; ஈவிரக்கமற்ற, கருணையற்ற ஒரு பயங்கரவாத இயக்கம். எனது நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து, நிரந்தரமான சமாதானத்தை நான் ஏற்படுத்துவதற்காக, உங்கள் எல்லா நாடுகளினதும் பேராதரவையும் பேருதவியையும் வேண்டிநிற்கிறேன்."

## புலிகள் இயக்கத்தின் காலக்கெடு

இவ்விதமாக, மிகவும் சூட்சுமமாகத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நாசகாரத் திட்டத்தை முறியடிப்பதற்காகத்தான், புலிகள் இயக்கம் காலக்கெடு விதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது.

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதன்மூலமும், அரசியற் பிரச்சினைகளைப் பேசிவிட்டுக் குழப்பியடிப்பதன் மூலமும் என - ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட - இருவேறு வழிமுறைகளினூடாக -

பேரினவாத யுத்தத்தை நோக்கி நுட்பமாக நகர்த்திச் செல்லப்பட்ட இந்தச் சதி நடவடிக்கையை முறியடித்து அம்பலப்படுத்துவதற்காக-

பேச்சுவார்த்தையிலிருந்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டியது, புலிகளுக்கு தவிர்க்க முடியாததாகிப் போனது.

சந்திரிகா அம்மையாரின் சுயரூபத்தை அம்பலப்படுத்தவும், அமைதியை முகத்தில் காட்டிய போதும் போரையே அகத்தில் வைத்திருக்கும் ஒரு பேரினவாதியே அவரும் என்பதை இனங்காட்டவும், சமாதானத்தை வெளியில் பேசிய போதும் யுத்தத்திற்காக உள்ளுக்குள் திட்டம் தீட்டிய ஒரு வழமையான சிங்களத் தலைவரே சந்திரிகாவும் என்பதை வெளிப்படுத்தவும் - முள்ளை முள்ளால் எடுப்பதுபோல - 3 ஆவது ஈழப்போரைத் துவக்குவது புலிகளுக்கு அத்தியாவசியமானதாகிவிட்டது.

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் காலத்தைக் கடத்திக் கொண்டு, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத் தன் படைகளைப் பலப்படுத்திக்கொண்டு, அரசாங்கமானது ஒரு பெரும் போருக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்தபோது -

காலக்கெடு விதிப்பதையும் அதற்கமையச் செயற்படுவதையும் தவிர, விடுதலைப் புலிகளுக்கு மாற்றுவழி எதுவுமே இருக்கவில்லை.

இப்போது, பேச்சுக்களிலிருந்து விலகிப் போரை ஆரம்பித்தமைக்காக வரிந்துகட்டிக்கொண்டு நின்று, மாறிமாறிப் புலிகள் இயக்கத்தைக் கண்டிக்கும் மேற்குலகமானது -

பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போது, அரசாங்கம் வெளிநாடுகளில் தனது படைகளுக்காக வானூர்திகளையும், கடலூர்திகளையும் வாங்க ஆட்களை அனுப்பியபோது கண்டிக்காமலிருந்தது ஏன்?

துன்பத்திற்குள் துவண்டுபோய்க் கிடக்கும் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் இழுத்தடித்த போது, தட்டிக்கேட்காதது ஏன்? அதனைச் செய்யுமாறு சந்திரிகா அம்மையாரை நிர்ப்பந்திக்காதது ஏன்?

சர்வதேசத்தின் இந்த பாரபட்சம் காட்டும் பக்கச் சார்பான தன்மை, கவலைக்குரியதும் கண்டனத்துக்குரியதுமாகும்! ○

# கலையும் மாயை

ஐ. தே. கவினது அட்டூழியங்கள் அனைத்திற்கும் ஆதாரமானது ஜனாதிபதி ஆட்சிமுறைதான் என்றும், தாம் வெற்றி பெற்றால் உடனடியாக ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் என்றும், **சந்திரிகா** தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் தேர்த காலத்தில் வாக்குறுதி அளித்தனர். இது அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு பிரதான விடயமாய் இருந்தது. சிங்கள மக்கள் இந்த வாக்குறுதியைப் பெரிதும் நம்பினர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட மாட்டாதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

"ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்" என்று சிங்கள மக்களிற்குக் கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதியில் இருந்து தடம்புரள்வதற்குச் சந்திரிகா எடுத்துள்ள இலகுவான கருவி இனப்பிரச்சினை என்பதாகும். தனது சொந்தச் சிங்கள மக்களிற்கு அளித்துள்ள வாக்குறுதியில் இருந்து சந்திரிகா இவ்வாறு தடம்புரள்கிறார் என்பது ஒருபுறமிருக்க, தனது சொந்த நலனுக்குச் சாதகமாக வலுமிக்க அதிகாரங்கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பேணுவதற்கு எடுத்த வழிமுறை, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டமைதான். வழமையாக சிங்களத் தலைவர்கள் அனைவரும் செய்ததுபோலவே - தமது சொந்தப் பிரச்சினைகளைத் தமிழ் மக்கள்பால் திசை திருப்பிவிட்டு - தமது அரசியல் இலாபத்தினை ஈட்டும் வெட்கக்கேடான இனவாத அரசியலையே சந்திரிகாவும் பின்பற்றுகிறார்.

சந்திரிகாவின் பிரச்சினை பின்வருமாறுள்ளமை தெளிவு.

சந்திரிகா ஜனாதிபதித் தேர்தலில் 62 வீத வாக்குகளைப் பெற்றார். ஈழத்தமிழரும், மலையகத் தமிழரும், முஸ்லிம்களும் அளித்த வாக்குகளும் இதில் அடங்கும். நாடாளுமன்றத் தேர்தல் ஆயின் மேற்படி ஈழத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்து பிரிந்தே சென்றிருக்கும்; அப்போது சந்திரிகாவின் 62 வீத வாக்கு பெரிதும் குறையும்.

தற்போதைய நிலையில் சந்திரிகாவிற்கு, கூட்டரசாங்கம் என்ற வகையில், நாடாளுமன்றத்தில் ஒரு மேலதிக ஆசனம் மட்டுமே உண்டு அதுவும் கூட்டரசாங்கம் என்ற காரணத்தால் பலவீனமான நிலையே; அதாவது, **சிறிமாணி லலித் அத்துலத்முதலி** தலைமையிலான 'ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி'யோ, அன்றி **அஷ்ரப்** தலைமையிலான 'முஸ்லிம் கொங்கிரசோ', அன்றி சந்திரசேகரனின் 'மலையக மக்கள் முன்னணி'யோ, இவற்றில் ஏதாவது ஒன்று தமது ஆதரவை விலக்கிக்கொண்டால் சந்திரிகா அரசாங்கம் நிர்க்கதிக்குள்ளாகும்.

எனவே, இந்தப் பின்னணியில், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து 'வெஸ்மினிஸ்ரர் நாடாளுமன்ற முறை'யைக் கொண்டு வந்தால் எந்தக் கட்டத்திலும் அரசாங்கம் கவிழ்ந் விடும் என்ற அச்சமே சந்திரிகாவிடம் உண்டு. இதனைத் தடுப்பதற்குரிய இலகுவான வழியாகச் சந்திரிகாவுக்குத் தெரிவது ஜனாதிபதி முறையைப் பேணுவதுதான்.

இத்துடன் இன்னொரு விடயத்தையும் இங்கு பரிசீலனை செய்யலாம். அதாவது, ஜனாதிபதி முறையை ஒழித்துவிட்டு, நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய பொதுத் தேர்தலுக்குச் சந்திரிகா தயாராக முடியாதா?

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடைபெறுமாயின், சந்திரிகாவின் கட்சி தனிப்பெருங் கட்சியாய் வெற்றிபெற முடியாது என்பது தெளிவு. 40 வீதத்திற்கு உட்பட்ட வாக்குகளே, சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்துள்ளன. ஆட்சிக்கு வருமுன் இருந்த கறைபடியாத கரமல்ல சந்திரிகாவின் தற்போதைய கரம்; அத்துடன் தனது தேர்தல் வாக்குறுதிகளில், பாணின் விலையைக் குறைத்ததைத் தவிர வேறெதனையும் அவர் செய்யவில்லை. இந்நிலையில், முன்பு கிடைத்த வாக்குகளைவிடவும் குறைவான வாக்குகளே இனிக் கிடைக்கலாம்.

இப்பின்னணியில், தம்மாற் பெரிதும் கண்டிக்கப்பட்ட ஜனாதிபதி முறையை சந்திரிகா பேணுவாரே தவிர, ஒழிக்கமாட்டார். ஜனாதிபதி முறைமையில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும், சந்திரிகா இப்படித்தான், முன்சொன்னவற்றுக்கு முரணாக நடப்பார்.

மேற்படி தர்க்கபூர்வ விடயங்களிலிருந்து ஒன்றை நாம் தெளிவாக்கலாம். தனது தேர்தல் வாக்குறுதிகளினாலேயே சந்திரிகா தன்னைக் கைதியாக்கி உள்ளார் (அப்படிப்பட்ட வாக்குறுதிகளை அளிக்காமல் அவராற் பதவிக்கு வந்திருக்கவும் முடியாது). இவற்றிலிருந்து தன்னை மீட்கவும், தற்காக்கவும் அவர் கைக்கொள்ளப்போகும் வழிமுறை, தீவிர இனவாதம்தான் (இதற்கான சந்திரிகாவின் கால அட்டவணை எதிர்வரும் யூன், யூலை மாதங்கள். ஏனெனில், இந்த யூன், யூலை மாதங்கள்தான் உத்தேச அரசியற்திட்ட மாற்றக்காலம். அதுவரை பிரச்சினையை இழுத்தடித்துவிட்டுப் பின்பு முழு இனவாதத்தில் குதிப்பதே திட்டம்).

முன்னைய சிங்கள இனவாதத் தலைவர்களைவிடவும் சந்திரிகா மிகவும் ஆபத்தானவர். ஏனெனில், முன்னையோர் வெளிப்படையான இனவாதிகள்; **சந்திரிகா, ஜனநாயகம்; மனித உரிமை, சமாதானம் எனும் முலாம்களைப் பூசிக்கொண்ட இனவாதி. ஆயினும் சந்திரிகாவின் வேடம் கலைய நாட்செல்லாது. சிறு மழை போதும் சந்திரிகாவின் வேடத்தைக் கலைக்க!** ○

www.eelamview.com

www.eelamview.com



# மூன்றாவது ஈழப்போர் மூண்டுவிட்டது

மூன்றாவது ஈழப்போர் தொடங்கி 2 வாரங்கள் முடிவடைந்துவிட்டன இந்தக் குறுகிய காலத்திற்குள் சிங்களப் படை 2பீரங்கிக் கப்பல்களையும், 2 அவ்ரோ விமானங்களையும் இழந்துவிட்டது. அத்துடன் 170இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர் - கணிசமான அளவு ஆயுதங்களையும் அது பறிகொடுத்துவிட்டது. இந்த இழப்பு விபரம், இரண்டு நாடுகளின் முப்படைகளுக்கும் இடையே நடந்த முழு அளவிலான ஒரு போரின் விளைவுகளைப் போல் உள்ளன அல்லவா?

உண்மையில் முழுப்பரிமாணத்துடன் நடைபெறப்போகும் ஒரு பெரும் போரைப்போலத்தான் மூன்றாம் ஈழப்போரானது அமையப்போகிறது, கடல் - வான் தரைகளில் இப்போர் தீவிரமடையலாம் என்பதை, கடந்த இருவாரச் சண்டைகள் காட்டுகின்றன. அத்துடன் போர்முனைகளில் சில நிரந்தர முடிவுகள் ஏற்படப்போகும் காலப்பகுதியாகவும் இந்த மூன்றாம் ஈழப்போர் அமையலாம்.

கடந்த 19ஆம் திகதி அதிகாலை திருமலைத் துறைமுகத்தினுள் புகுந்த நான்கு கடற் கரும்புலிகள், இரண்டு சிங்களக் கடல் ஓநாய்களை, அவற்றின் படுக்கையில்வைத்தே கொன்றுவிட்டனர். [இந்தக் கடற் கரும்புலித் தாக்குதலின் இராணுவ பரிமாணம் இன்னொரு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது].

இந்தக் கடற் கரும்புலித் தாக்குதலின்போது மூழ்கடிக்கப்பட்ட 'சங்காய்' வகை அதிவேகப் பீரங்கிக் கப்பல்களைப் பொறுத்தளவில், இவை, சிங்களக் கடற்படையின் முதுகெலும்பைப் போன்றவை. இதனால்தான் சூரயா, ரணசுறு கப்பல்களின் இழப்பை கடற்படையின் முதுகெலும்புமீது விழுந்த பலத்த அடி என வர்ணிக்கின்றார்கள்.


முன்னர், இரண்டாம் ஈழப்போரில் கடுமையான இழப்பைச் சந்தித்தது சிங்களக் கடற்படைதான். அதனுடைய கப்பல் பலத்தில் ஏறக்குறைய 15 வீதத்தை, அது இரண்டாவது ஈழப்போரில் இழந்திருந்தது.

இந்தநிலையில் மூன்றாவது ஈழப்போர் தொடங்கிய அன்றே, சக்திவாய்ந்த இரண்டு அதிவேக பீரங்கிப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை சிங்களக் கடற்படையை வெகுவாகப் பாதித்துவிட்டது எனலாம். இதனால், தமிழீழக் கடல் பிராந்தியம் மீதான சிங்களப் படையின் ஆதிக்கம் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது.

## கிழக்குக் கடற்பிராந்தியத்தில் சண்டை

இரண்டாவது ஈழப்போர் காலத்திலேயே கடற்சண்டைகள் தீவிரமடைந்திருந்தாலும் கூட, கிழக்குக் கடற்பிராந்தியத்தில் ஒரு கப்பல் தகர்ப்பும் நடந்திருக்கவில்லை. சூரயா, ரணசுறு கப்பல்களின் மூழ்கடிப்பு கிழக்குக் கடற்பிராந்தியத்திலும் கடற்புலிகளின் ஆதிக்கம் விஸ்தரிக்கப்பட்டுவிட்டதையே காட்டுகின்றது. இனிமேல் வடக்கு, கிழக்கு, மேற்கு என்று தமிழீழத்தின் அனைத்துக் கடற்பிராந்தியத்திலும் கடற்புலிகளின் ஆதிக்கம் பெருக வாய்பபுகள் உண்டு.

'சாகரவர்த்தனா' கப்பல் தகர்ப்புடன் மேற்குக் கடலூடான கடல் விநியோகவழி பெரும்பாலும் மூடப்பட்டே கிடந்தது. தலைமன்னார் மற்றும் காரைநகர் படைத்தளங்களுக்கான விநியோகங்கள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய பின்னர், மீண்டும் அந்த பிரகடனப் படுத்தப்படாத கடல் தடையை கடற்புலிகள் ஏற்படுத்திவிட்டனர்.



திருக்கோணமலைத் துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட்ட 'சூரயா' - அதிவேகப் பீரங்கிக் கப்பல்.

இதேவேளை, பலாலிப் பெருந்தளம், வெற்றிலைக்கேணி, ஆனையிறவுப் படைத்தளம் மற்றும் முல்லைத்தீவு படைத்தளம் என்பவற்றிற்கு கிழக்குக் கடற்பிராந்தியத்தினூடாகவே விநியோகங்கள் நடந்துவந்தன. வீரயா, ரணசுறு தகர்ப்புடன் கிழக்குக்கடல் விநியோக வழியும் சிங்களப் படைக்கு வில்லங்கமான ஒரு விடயமாக மாறிவிட்டது.

கிழக்கு, மேற்கு கடல்வழி விநியோகங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், வடபுலத்திலுள்ள படைமுகாம்களின் எதிர்காலத்தை கேள்விக்குரியதாக மாற்றிவிட்டன.

## வான் போரின் ஆரம்பம்

இரண்டாம் ஈழப்போரின் பிற்பகுதியில் வடபுல முகாம்களுக்கான கடல்வழி விநியோகத்தில் பெருப்பாதிப்புக்கள், ஏற்பட்டபோது, வான்வழி விநியோகத்திலேயே அது தங்கியிருக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எழுந்தது. படையினரின் அத்தியாவசிய தேவைகள் மற்றும் ஆயுத தளபாடங்களின் விநியோகங்களை வான்படையின் போக்குவரத்து விமானங்களே செய்துவந்தன. அதாவது, வடபுல முகாம்களுக்கும் கொழும்புக்குமிடையேயான தொப்புள் கொடிபோல சிறீலங்காவின் விமானங்களே செயற்பட்டன. இப்போது அதற்கும் பேராபத்து வந்துவிட்டது. கடந்த 28ஆம் 29ஆம் திகதிகளில் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவினர், குடாநாட்டின் வான்பரப்பில் வைத்து வான்படையின் இரண்டு 'அவ்ரோ' விமானங்களைச் சுட்டு வீழ்த்திய வரலாற்று நிகழ்ச்சியுடன், வடபுல வான்பரப்பில் சிங்களப் படை விமானங்கள் பறப்பதற்கும் தடை வந்துள்ளது!


வடபுலத்திலுள்ள சிங்களப் படைமுகாம்களுக்கான தரை வழி விநியோகங்களை புலிகள் அறுத்தெறிந்த போது, தனது கடற்பலத்தைப் பயன்படுத்தி அம்முகாம்களைப் பயமின்றிப் பேணலாம் என்ற சிங்கள அரசின் முன்னைய நம்பிக்கைக்குக் கடற்புலிகள் குறுக்கே நின்ற போது தனது வான்பலத்தை அதிகம் நம்பவேண்டிய நிலைக்கு சிங்கள அரசு வந்தது. ஆனால் இப்போது, அந்த நம்பிக்கைக்குக் குறுக்கேபுலிகளின் விமான எதிர்ப்புப் படை அணி வந்து நிற்கின்றது.

விமானம் சுட்டுவீழ்த்தப்பட்ட செய்தி கொழும்பைச் சென்றடைந்ததும், வெளிநாட்டில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது விஜயத்தைச் சுருக்கிக்கொண்டு கொழும்பு திரும்பினார். திரும்பிய உடனேயே அமைச்சர் அவையையும் - படைத் தளபதிகளையும் அழைத்து மந்திராலோசனை நடத்தியதானது, விமானங்கள் வீழ்த்தப்பட்டதன் அரசியல் - இராணுவ முக்கியத்துவத்தை சாதாரண மக்களுக்கும் உணர்த்திவிட்டது.

**உண்மையில், கடற்புலிகளும் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவினரும் ஒன்றுசேர்ந்து, வடபுலத்தில் கடல் வான்வழி விநியோகங்களில் தங்கியிருக்கும் படைமுகாம்கள் மீது, ஒரு இராணுவ - பொருளாதார முற்றுகையை இட்டுள்ளனர் என்றால், அது மிகையாகாது.**

யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமிக்கும் பேராசையுடன் வடபுலம் எங்கும் குவித்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 50,000 படையினரது தேவைகளை, புலிகளின் கடல் - வான் முற்றுகைகளையும் மீறி, அரசால் நிறைவேற்றி வைக்க முடியுமா என்பது, அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கும் ஒரு கேள்வி ஆகும்.

படையினர்க்கான வான்வழி விநியோகம் தடைப்பட்டுவிட்டது என்பது ஒருபுறம் இருக்க, **போர்விமானங்கள் இல்லாத போர்முனையை சிங்களப் படைகளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.** ஏனெனில் டாங்கிகள் துணைக்குவர, போர் விமானங்கள் வானில் வட்டமிட, எறிகணைகளை மழைபோல வீசிக்கொண்டு போரிடும் மரபுவழிப் போர்முறைக்கே, சிங்களச் சிப்பாய்கள் பழக்கப்பட்டவர்கள்; பழக்கப்பட்டவர்கள் என்பதைவிட அந்தளவு துணைப்பலமும் கிடைக்கும்போதே துணிவுடன் போராடும் மனநிலையைக் கொண்டவர்கள். எனவே, ஒரு படைமுகாமைப் புலிகள் தாக்கும்போதோ அல்லது சிங்களப் படை ஒரு இராணுவ நடவடிக்கையைச் செய்யும்போதோ போர் விமானங்களின் துணை படையினர்க்குக் கிடைக்காது என்பதை அறிந்தாலே, அவர்களது போரிடும்



திருக்கோணமலையில் மூழ்கடிக்கப்பட்ட 'ரணசுறு' - அதிவேக பீரங்கிக் கப்பல்.

**''என்ன சேர், நீங்கள் தனித்தமிழ் நாட்டைப்பற்றியா கதைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஊர்காவற்துறைக் கடலில் அல்லது காரைநகர்க் கடலில் வந்து நின்று சிறீலங்கா கடற்படைக் காரனுடைய ஒரு கப்பல் பத்துப் பீரங்கிக் குண்டுகளை வீசினால் உங்களது தமிழீழம் இந்து சமுத்திரத்துக்குள்ள போகாதோ?''**

— திரு. மு. சிவசிதம்பரம்

**1968 ஆம் ஆண்டு ஒரு ரயில் பயணத்தின் போது திரு. வ. நவரத்தினத்திற்குச் சொன்னதாக ''தமிழ்த்தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்'' என்ற ஆங்கில நூலிலிருந்து.** (பக். 282)


www.eelamview.com

www.eelamview.com




உறுதி வீழ்ச்சி அடைந்துவிடும். இதனால் தோல்விகளும் - பாரிய இழப்புகளும் சிங்களப் படையின் நிரந்தர நண்பர்களாகவே மாறும் சாத்தியங்களும் உண்டு.

கடலிலும் - வானிலும் இன்று சிங்களப் படைக்கு ஏற்பட்டுள்ள முடக்கநிலையைத் தீர்க்க அரசு பகீரத முயற்சிகள் செய்யும் என்பதில் ஐயம் இல்லை. அப்படியாயின், சிங்கள அரசு தனது வான்படையையும் கடற்படையையும் முற்றுமுழுதாக மாற்றி, அதிநவீனப்படுத்த வேண்டிவரும். இது அரசுக்கு சாத்தியமானதா என்ற கேள்வியும் எழுகின்றது. அப்படித்தான் சாத்தியமானாலும் அந்த அதிநவீன ஆயுதங்களை அழிக்கும் ஆற்றலை புலிகள் இயக்கம் தொடர்ந்தும் பேணிக்கொண்டே இருக்கும். ஏனெனில், தலைவர் பிரபாகரனின் விடா முயற்சியும் - போர்க்களத்தை நெறிப்படுத்தும் அவரது அபாரத்திறனும், தமிழினத்திற்கு தொடர்ந்தும் வெற்றிகளையே தேடித்தரும் என்பது உறுதி. அதேவேளை கரும்புலிகளின் செயல்திறன், எதிரிபோடும் எந்தத் தடைகளையும் தகர்ப்பதுடன், எதிரி பயன்படுத்தும் எந்த நவீன கருவிகளையும் வெற்றிகொள்ளும் என்பதும் திண்ணம்.



எமது வானூர்தி எதிர்ப்புப் படைப்பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'அவ்ரோ ரக விமானத்தின் தோற்றம்.

**போர் விமானங்கள் இல்லாத போர்முனையை சிங்களப் படைகளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.**



கடற் கரும்புலி
**மேஜர் மதுஷா**
முருகேசு இராசலட்சுமி
(திருமலை)
பிறப்பு:- 25. 05. 1974
வீரச்சாவு: 19. 04. 1995



கடற் கரும்புலி
**கப்டன் சாந்தா**
சிவசுப்பிரமணியம் - விஜயதேவி
(புங்குடுதீவு)
பிறப்பு:- 25. 08. 1973
வீரச்சாவு: 19. 04. 1995

## தரைப்போர் நிலைமை


இரண்டாவது ஈழப்போரைப் போலவே, கிழக்குப் போர்முனையில், மூன்றாவது ஈழப் போரும் வெடித்துள்ளது. ''கிழக்கு எமது கட்டுப்பாட்டுக்குள்'' என்று ஓயாது கூச்சலிடும் பேரினவாதிகளுக்கு, அங்கே அடுத்தடுத்து புலிகள் செய்த வெற்றிகரமான தாக்குதல்கள் ஒரு அதிர்ச்சிவைத்தியத்தைக் கொடுத்துள்ளன.

திருமலைத் துறைமுகத்திற்குள் கரும்புலித் தாக்குதல் நடாத்தப்பட்டு 48 மணிநேரத்திற்குள், மீண்டும் துறைமுகப் பகுதியில் ஒரு பதுங்கித் தாக்குதலை புலிவீரர்கள வெற்றிகரமாகச் செய்தது, ஒரு இராணுவ சாதனையே ஆகும்.


அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டுமுறிவு இராணுவ முகாம் மீதான அதிரடித் தாக்குதல், கனதியான ஒரு இராணுவ பரிமாணத்தைக் கொண்டு விளங்குகின்றது. மூன்று மைல சுற்றாடலுக்குள் மூன்று முகாம்களால் சூழப்பட்டிருந்த கட்டுமுறிவு இராணுவ முகாமைத் தாக்கி, முற்றாக அதை அழித்ததும் - முகாம் படையினர்க்கு உதவ வந்த உதவிப்படைகளை அடித்து விரட்டியதும், ஒரு முக்கிய செயற்பாடாக அமைகிறது. இந்த முகாம் தாக்குதலில் 25 இற்கும் அதிகமான படையினர் கொல்லப் பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, 28.04.95 அன்று அதிகாலை, இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள சரவணை என்ற பகுதியில நடாத்தப்பட்ட வெற்றிகரமான ஒரு அதிரடியின் முக்கியத்துவத்தை, அன்று மாலை நடந்த விமான வீழ்த்துகையால் ஏற்பட்ட மகிழ்ச்சியில், மக்கள் சற்றுக் குறைத்துப் பார்த்துவிட்டனர் என்று கூறலாம். கடலவழியாக, இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியான சரவணைக்குள் புகுந்து, புலிகளின் தரப்பில் எந்தவித இழப்புகளும் இல்லாமல், 23 படையினரைக் கொன்று, பெருந்தொகையில் ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியும் வந்த அததாக்குதல், உண்மையில் புலிகளுக்கு மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்த ஒரு அதிரடித் தாக்குதல் ஆகும். 'எப்படி வந்தார்கள் - எப்படிச் சென்றார்கள்?' என்று அரசுப்படைகளுக் ஆச்சரியத்தைக் கொடுத்த படை நகர்வும் - தாக்குதல் வேகமும், உண்மையில் புலி வீரர்களுக்கே உரித்தான பண்பு என்றே கூறலாம்.

மொத்தத்தில், மூன்றாம் ஈழப்போரில் - கடல், வான், தரை என்று அனைத்துப் பரிமாணங்களிலும் புலிகள் இயக்கத்தின் கையே ஓங்கி உள்ளதை, இந்த இருவார கால நிலைமைகள் காட்டுகின்றன. இதேவேளை, பதில் நடவடிக்கையாக, ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையைச் செய்யமுடியாது சிங்கள அரசு திணறுவதும் தெரிகின்றது. அதை மறைப்பதற்காக, தாம் இன்னும் இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவிடவில்லை என, சந்திரிகா அரசு மழுப்ப முனைகின்றது. O



கடற் கரும்புலி
**மேஜர் கதிரவன்**
கோவிந்தன் சிவராசா
(பரந்தன்)
பிறப்பு:- 26. 07. 1973
வீரச்சாவு: 19. 04 1995



கடற் கரும்புலி
**மேஜர் தணிகைமாறன்**
ஜாக்கொப் அன்ரன் பெனடிற்
(கட்டைக்காடு)
பிறப்பு:- 28 06. 1970
வீரச்சாவு: 19. 04. 1995

www.eelamview.com

www.eelamview.com



# நீரடி நீச்சல் படையணியின் சாதனை!

"1995.04.19 அன்று, தமிழீழத்தின் தலைநகரான திரு்கோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் ஊடுருவித்தாக்கி, சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு அதிவேக பீரங்கிப் படகுகளை கடற்கரும்புலிகள் தகர்த்தழித்துள்ளனர். இவ்வெற்றிகரமான தாக்குதலை, விசேட படையணிகளான "சுலோஜன்", "அங்கயற்கண்ணி" நீரடி நீச்சல் படையணிகள்தான் மேற்கொண்டுள்ளன. விடுதலைப் புலிகளின் படைவளர்ச்சியில், மேலே கூறப்பட்ட சம்பவத்தின் 'இராணுவப் பரிமாணத்தை' எமது மக்களுக்கு எடுத்து விளக்குவதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு இராணுவ நடவடிக்கையைப் பொறுத்த வரையில் அது மேற்கொள்ளப்படும் இடம், தாக்குதலை நடாத்துவதற்குத் தேர்ந்தெடுத்த சந்தர்ப்பம், நடவடிக்கையில் வெற்றியீட்டுவதன் பொருட்டு எம்மால் குறித்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் இராணுவ வளம் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே, இவ்வெற்றிகரமான நடவடிக்கையின் பரிமாணத்தை நோக்குவதற்கு, இவற்றைத் தனித்தனியே ஆராய்வதே பொருத்தமானதாகும்.

தாக்குதல் நடாத்தப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினைப் பொறுத்த வரையில், தமிழீழத்தின் தலைநகரான திருக்கோணமலையானது முற்றாகத் தமது கட்டுப்பாட்டிலேயே உள்ளதென எதிரி கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்ற அதே வேளையில், இங்கு அமைந்துள்ள துறைமுகமானது உலகில் பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகமாகும். 2 ஆம் உலகப் போர்க் காலகட்டத்தில், பிரித்தானியப் பேரரசின் 'றோயல் கடற்படை'யால் பயன்படுத்தப்பட்டுவந்த 'HMS High-flyer' எனும் இத்தளம், 1957 ஒக்ரோபர் 15 ஆம் திகதி, சிறீலங்காக் கடற்படையிடம் கையளிக்கப்பட்டது. தேவநம்பியதீச மன்னரின் நினைவாக இத்தளத்திற்கு சிறீலங்காக் கடற்படை, 'SLNS Tissa' எனும் பெயரிட்டு, அத்தளத்தை கிழக்குக் கடற் பிராந்தியத் தலைமையகமாக்கியதுடன், சிறீலங்காக் கடற்படையின் கப்பல்கட்டும் நிறுவனத்தையும் கடற்படையின் பயிற்சிக் கல்லூரியையும் திருக்கோணமலையில் நிறுவியது. இவ்வாறு அன்று நிறுவப்பட்டவை அனைத்தும் வளர்ச்சியுற்று, சிறீலங்காக் கடற்படையின் நடவடிக்கைகளுக்கான தலைமையகமாக இன்று விளங்குகின்றன. இதன் வேலைத்திட்டங்களாக சிறுரக கடற்படைப் படகுகளைக் கட்டுதல், சேவையில் ஈடுபடும் கலங்களில் திருத்தங்களை மேற்கொள்ளல்; கிழக்குப் பிராந்திய கடற் பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், புதிதாகச் சேர்க்கப்பட்ட அதிகாரிகள் - சிப்பாய்கள் ஆகியோருக்கான அடிப்படைப் பயிற்சிகள், துறைசார் பயிற்சிகள் என்பனவற்றை வழங்குதல் ஆகியவற்றுடன், அதிவேகப் பீரங்கிப் படகுகளின் அணி, மற்றும் அதிவேகத் தாக்குதற் படகுகளின் அணி என்பனவும் இங்குதான் நிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் இத்தாக்குதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மேலும், இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமானது, விடுதலைப் புலிகளின் இராணுவ வரலாற்றில் முக்கிய நிகழ்வென்றே கூறலாம். அதாவது, இரண்டாம் கட்ட ஈழப் போரின் பின்னர், சந்திரிகா அரசுடன் புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்து, தமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாத நிலையில், தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக்கூறி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு காலக்கெடுவையும் விதித்தனர். புலிகள் விதித்த காலக்கெடுவினைக் கணக்கிலெடுக்காமல் இருந்த சந்திரிகா அரசுக்கு முதலாவதும், தெளிவானதும், வெற்றிகரமானதும், கரும்புலிகளால் நடாத்தப்பட்டதுமான தாக்குதல் இதுவாகும். எனவே, இத்தாக்குதல் நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பமும் வரலாற்றுப் பதிவாகும்.

அடுத்ததாக, இவ்வெற்றிகரமான தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட இராணுவ வளமானது வியக்கத்தக்கதொன்றாகும். அதாவது, 1984 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறுதொகை உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட 'கடற்புலிகள்' எனும் சிறு பிரிவானது வளர்ச்சியுற்று, 1991 இல் 'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' எனப் பெயர் சூட்டப்பட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளிலெல்லாம் கடற்புலிகளின் பங்கு இன்றியமையாதது. அது மட்டுமின்றி, கடற்புலிகள் செயற்படத் தொடங்கி ஓரிரு வருடங்களிலேயே பல வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு, தமிழீழத்தின் குறிப்பிடக்கூடியளவு கடற் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்; இதனை எதிரிகளின் இராணுவ ஆய்வாளர்கள்கூட இன்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

## இதுவரை மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் மொத்த எடை

| | | |
|---|---|---|
| சூரயா | 131 | தொன்கள் |
| ரணசுறு | 150 | ,, |
| சாகரவர்த்தனா | 330 | ,, |
| கண்காணிப்புக் கப்பல் | 6300 | ,, |
| ஓசன் றேடர் | 1200 | ,, |
| சுப்ப டோறா | 54 | ,, |
| நீருந்து விசைப்படகுகள் ஒவ்வொன்றும் 5 தொன்கள் வீதம் 9 படகுகள் (கைபபற்றப் பட்டவை உட்பட) | 45 | ,, |
| கூகர் படகு | 8 | ,, |
| | 8218 | ,, |

ஆனால், உலகில் பாரிய கடற்படைகளைக் கொண்டிருக்கும் நாடுகளைத்தவிர, கடற்படையென்ற ஒன்றைக் கொண்டிருக்கும் அனைத்துச் சின்னஞ்சிறு நாடும்கூட - அவை அளவிலும் ஆற்றலிலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும் - ஏதாவதொரு வகையில் தமக்கெனவோர் விசேட படையணிகளை, கடலில் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்காக உருவாக்கியுள்ளன. இவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவைகளாக -

அமெரிக்கக் கடற்படையின் விசேட நடவடிக்கைக் குழுவான, 'சீல்' ( Seal ),

சோவியத் கடற்படையின் சிறப்புக் குழுவான 'ஸ்பெற்நாஸ்' ( Septsnaz ),

பிரித்தானியக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான, 'றோயல் மரீன்கள்' ( Royal Marines ),

கிழக்கு ஜேர்மனியின் கடற்படை மற்றும் காலாட்படைச் சிறப்பணியின் 'ஏண்ஸ் மொறிற்ஸ் ஆண்ற் ( Ernts Moritz Arnd ),

போலந்து நாட்டுக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான 'லுசிக்கா' ( Luzycka),

இத்தாலி நாட்டுக் கடற்படையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவான 'கம்மா' ( Gamma ) மற்றும்,

சுவீடன் நாட்டுக் கடற்படையின் விசேட இடுபணிக் குழுவான 'றேஞ்சர்ஸ்' ( Rangers ) போன்றவை உள்ளன.

இவை யாவும் வல்லரசுநாட்டு கடற்படையணிகளின் சிறப்புநடவடிக்கைக் குழுக்களாகவுள்ள போதும், இவர்களனைவரும் சாதாரண நீரடிச் சுழியோடிகளாகவும் செயற்படுகின்றனர். இவ்வாறான விசேட படையணியில்உள்ள உறுப்பினர்களை 'தவளைமனிதர்கள்' (Frogmen) என அழைப்பார்கள். மேலே கூறப்பட்ட இவ்விசேட படையணிகளது செயற்பாடானது, 2ஆம் உலக மகாயுத்தத்தின் வெற்றியினைத் தீர்மானித்ததும் இதுவரை உலகில் இடம்பெற்றவற்றில் பாரிய கடல்தரையிறக்க நடவடிக்கையானதுமான 'நோர்மண்டி தரையிறக்கத்தில்' நேசநாட்டுப் படையணிகளாலும்; அதன் பின்னர் இடம்பெற்ற பனிப்போர்க் காலத்திலும்; 1980இன் ஆரம்பங்களில் இடம்பெற்ற வளைகுடா யுத்தம், போக்லண்ட் யுத்தம் ஆகியவற்றிலும்; 1990 களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற 'பாலைவனப் புயல்' நடவடிக்கைகளிலும் மாபெரும் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்தன. இப்பிரிவினர் தமது பிரதான இடுபணியை நிறைவேற்றுவதன் பொருட்டு நீரடி தகர்ப்புக் குழுக்களை (Underwater Demolition Teams UDT) எனும் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இவர்களது மேலதிக பணிகளாக - எதிரிகளால் தமது பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படும் தரையிறக்க நடவடிக்கைகளின் போது, அவற்றை முறியடிக்க கரையோரப் பிரதேசங்களில் ஊடுருவிப் புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்தல்; எதிரிகளின் கப்பலணிகளின் பின்னால் தொடர்ந்து சென்று எதிரியின் நகர்வுப் பாதைகள், கப்பல்களின் தொழில்நுட்பம் பற்றிய வேவுகளை அறிதல்; தமது பிரதான கடற்கலங்கள், கடற்தளங்கள் என்பவற்றை எதிரியிடமிருந்து பாதுகாத்தல்; தம்மால் மேற்கொள்ளப்படும் தரையிறக்கம் ஒன்றின்போது தமது துருப்புக்களுக்குப் பாதுகாப்பு வழங்கல்; எதிரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தினுள் ஊடுருவி, பிரதான இலக்குகள் மீது திடீர்த் தாக்குதல்களை மேற்கொள்ளுதல் போன்றவையும் அடங்கும். இவ்வாறான தமது பணிகளுக்காக, இவர்கள் நீரடி நீச்சலுக்கான 'ஸ்குபா' உபகரணம், ( Scuba - Single Cylinder Underwater breathing Aparataus ) மற்றும் கடலினுள் பயன்படுத்தும் 'ஸ்கூட்டர்' ( Sea Scooter ) மற்றும் காற்றடிக்கும் படகுகள் ( Baloon Boats ), சிறுரக நீர்மூழ்கிகள் (Midgt Submarines ), நீரடி வாகனங்கள் ( Underwater Vehicles ), நீரடியில் பயன்படுத்தும் கைத்துப்பாக்கிகள் (Underwater Pistol ) என்பவற்றையே பயன்படுத்துகின்றனர்.

இந்தவகையில் இவர்களைப் போல அளவிலும் ஆற்றலிலும், இராணுவ வளங்கள் குறைவாகவே உள்ள நிலையிலும்கூட, கடற்புலிகளின் சிறப்புப் பிரிவான 'சுலோஜன் நீரடி நீச்சல் படையணி'யும், 'அங்கயற்கண்ணி நீரடி நீச்சல் படையணி'யும் தமது எதிரிக் கடற்படையான சிறீலங்காக் கடற்படைக்கு முகங்கொடுத்து, இன்று வெற்றிவாகை சூடியுள்ளன. சிறீலங்காக் கடற்படையிலும் சுழியோடிகள் பிரிவொன்று நிறுவப்பட்டு, இந்தியாவில் உள்ள கொச்சின், வெந்துருதி ஆகிய இடங்களில் பயிற்சி பெற்று, 75 பேருக்குக் குறையாத ஆள்தொகையைக் கொண்டுள்ளபோதும், கடற்புலிகளின் விசேட பிரிவுகளிடமிருந்து தப்புதல் என்பது அதிர்ஷ்டத்துக்குரிய ஒன்றாகும்! ○

## பயத்தின் உறைவிடம்!

"பயமே, உன்னைப் பார்க்க விரும்புகிறேன்!"

"நான் மாட்டேன்!"

"ஏன் பயமே, நீ பயப்படுகிறாயா?"

அதன் ஏக்க இடியை மட்டும் கேட்க முடிந்தது!

"ஏன் இந்தப் பயம்?"

'நீ நிற்பது ... நிற்பது...... தமிழீழம் என்பதால்!'

ஓர் எண்ணம் மின்னி மறைந்தது!

"ஏன், நீதானே முன்னர் எம்மவரை ஆட்கொண்டு நின்றாய்? அடிமைப்படுத்தினாய்?" என்றேன்.

"என் இயல்பை நினைத்தால் நீ உணர்வாய்! நான் பயம்! மனிதரின் நெஞ்சத்தில் புகுந்துவிட்டால் நான் ஆட்டிப் படைப்பேன!"

"அப்படி வந்து பார்க்கலாம்தானே?" என்றேன்.

"நான் மாட்டேன், பயமாயிருக்கிறது! உங்கள் நெஞ்சத்தில், தனது நிலத்தில், எனக்கு இடமில்லாது செய்து நிற்கிறதே தமிழீழம்!" என வேறெங்கோ 'பயம் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது.

"எங்கே போகிறாய்?" எனக் குரல் கொடுத்தேன்.

"உங்கள் எதிரிகளெனத் தூரத்தில் இருக்கும் சிங்களப் படையினரிடம்."

"அங்கு?"

"அவர்களது நெஞ்சத்தில் எனக்கு நிரம்ப இடம் இருக்கிறது! அங்கு நான் வாழ்வேன்! அத்துடன்....." என இழுத்தடிப்பது தெரிந்தது.

"சொல்" என அதட்டினேன்!

"சிங்களப் படையினரின் நெஞ்சத்தில் மட்டுமல்ல, அங்குள்ள தலைவர்களின் முகத்திலும் இன்று நன்றாக வாழ்வது நான்தான்" எனச் சிரித்தது பயம்!"

நான் இன்னும் பலத்துச் சிரித்தேன்!

- நாக. பத்மநாதன் ○

www.eelamview.com

www.eelamview.com




# "தலைவரின் சிந்தனைகள்"

**தலைவர் பிரபாகரன் அவர்களின் கருத்துக் குவியல் அடங்கிய கைநூல் ஒன்றை - தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு உருவாக்கி உள்ளது.**

**தலைவர் அவர்களின் 300 இற்கும் மேற்பட்ட சிந்தனைக் கருவூலங்கள் அடங்கிய இந்த சின்னத் தொகுப்பு, 120 இற்கு மேற்பட்ட அழகிய பக்கங்களைக் கொண்ட ஒரு சிறந்த வண்ணப்பதிப்பு ஆகும்.**

**'தலைவரின் சிந்தனைகள்' என்ற இக் கைநூல் மிக விரைவில் வெளிவரவிருக்கின்றது.**

**நூலின் முன்னுரையைக் கீழே தருகின்றோம்.**




பிரபாகரன் -

வரலாறு தமிழர்களுக்குத் தந்த ஒரு தலைவன்!

பிரபாகரன் -

ஒரு புதிய வரலாற்றைத் தமிழர்களுக்குத் தந்த தலைவன்;

அடிபணிந்து - தலைகுனிந்து - அடிமைப்பட்டு வீழ்ந்த தமிழன் ஆர்த்தெழுந்து - படைதிரண்டு - அடிகொடுத்து வென்ற பொற்காலம் ஒன்றின் பிதாமகன்.

தமிழனைத் தோற்கடித்தோரையெல்லாம் தமிழன் வென்றெழுந்த - தமிழனை அழவைத்தோரையெல்லாம் தமிழன் கதற வைத்த வீரயுகமொன்றின் சிருஷ்டிகர்த்தா.

தமிழீழ மண்ணில், ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டு, யுத்தத்தின் மையமாக நின்று, அதன் உந்துவிசையாக இயங்கி, வெற்றியின் சிகரத்தை நோக்கி அதனை வீறுநடை போடவைக்கும் பெருந்தலைவன்.

குறுகிய ஒரு காலத்திற்கு முன்னால் சிறிய ஆயுதக் குழுவொன்றின் கெரில்லாத் தலைவனாக மட்டுமே இனங்காணப்பட்ட பிரபாகரன் - இன்று, தொன்மையும், செழுமையும் வாய்ந்த பழம்பெரும் பாரம்பரியங்கள் மிக்க இனமொன்றின் தேசியத் தலைவராக உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மாமனிதன்.

தமிழன் அடிபட்டு, தமிழன் துன்புற்று, தமிழன் அலைந்தோடி, தமிழன் கண்ணீர் சிந்திக் கிடந்த ஒரு காலகட்டத்தில் இனப்பற்று மிகுந்த ஒரு புரட்சி வீரனாக ஆயுதம் ஏந்திய பிரபாகரன் - வீழாத படையாகத் தமிழன் அணிதிரண்டு, ஓயாத புயலாகப் பகையைச் சுழன்றடித்து, சாயாத மலையாக நிமிரும் வரலாற்று அதிசயத்தைக் கண்முன்னால் நிகழ்த்திய பெருந்தலைவன்.

தனியொரு மனிதனாய் நின்று. தமிழீழத் தேசியத்தின் ஆன்மாவைத் தட்டியெழுப்பி, தமிழர்களையே வியக்கவைத்த பெரும் வீரன்.

குலையாத கட்டுப்பாடும், வழுவாத நேர்மையும், தமிழனின் வாழ்வு நெறி பிறழாத ஒழுக்கமும், சளையாத போர்த்திறனும், இளகாத வீரமும், யாரும் நினையாத வகையாக - எவரும் மிகையாக நேசிக்கும் - உயிரை இயல்பாகத் தூக்கி எறியும் கலையாத தேசப்பற்றும், சுதந்திரத்தில் தணியாத தாகமும் கொண்டோராக - ஆயிரமாயிரம் இளையோரை வனைந்தெடுத்து - தளராத துணிவான, தேசத்தின் பலமான படையொன்றை உருவாக்கி, உலகில் எவருமே புரியாத விதமாக, ஒரு பெரும் சாதனை படைத்த தளபதி.

பிரபாகரன் என்றால் தமிழர்களின் 'ஆன்மா' என்று பொருள்; தமிழர்களின் 'வாழ்வு' என்று பொருள்; தமிழர்களின் 'கீர்த்தி' என்று பொருள்.

அவர் ஒரு அற்புதமான மனிதர்; அபூர்வமான மனிதர்; ஆச்சரியமான பல தன்மைகளாலும், பண்புகளாலும், குணவியல்புகளாலும் நிறைந்திருக்கும் அதிசயப் பிறவி.

அபரிமிதமான ஆற்றல்கள் மிக்க தனது அழகான ஆளுமையால் முழுத்தேசத்தையுமே ஆகர்சித்து நிற்கும் அசாதாரண தலைவர்.

தத்தமது தேசங்களிற்கும், இனங்களிற்கும் தங்களது பெயர்களினால் பெருமையினைத் தேடித்தந்த, உலக சரித்திரத்தின் தலைசிறந்த மனிதர்களின் வரிசையில் அவரது பெயரும் பொறிக்கப்பட்டுவிட்டது! பிரபாகரன் என்ற பெயர், தமிழீழத்திற்கும் தமிழினத்திற்கும் ஓர் அழியாத புகழ்! என்றும் கிடையாத தலைநிமிர்வு!

தமிழர்களின் சேவகனாகி, தமிழர்களின் தொண்டனாகி, தமிழர்களின் தளபதியாகி, தமிழர்களின் தலைவனாகி, தமிழர்களின் பலமாகி, தமிழர்களின் கவசமாகி, தமிழர்களின் மணிமகுடமாகி... அடக்கி ஒடுக்கப்பட்டு முடங்கிச் சுருண்டுகிடக்கும் உலகத் தேசிய இனங்களுக்கு உன்னதமான ஒரு முன்னுதாரணமாகி... பூலோகத்தின் முள்ளந்தண்டைச் சிலிர்த்திடவைக்கும் ஒரு பெயராகிவிட்டது பிரபாகரன்!

இந்தக் கைநூல் - அந்த மாபெரும் "தலைவரின் சிந்தனைகள்."

பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு விடயங்களில் அவரது சிந்தனையில் துளிர்த்தவைகளின் சேர்க்கை; பொறுக்கி எடுக்கப்பட்டவைகளின் சின்னத் தொகுப்பு. ○



# மாறிய விதர்!

ஐ தே. கவின் அட்டூழியத்திலிருந்து இலங்கைத்தீவை மீட்கப்போகும் மீட்பாராயும், சமாதானப் புறாவாயும், தேர்தற் காலங்களிற் சந்திரிகா காட்சியளித்தார்.

சமாதானத்தின் பெயரால் சந்திரிகா பதவிக்கு வந்தார். பத்திரிகைகளிலும் மற்றும் வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும், சமாதானப் புறாவாக அவர் சிறகடித்துப் பறந்தார் ஆனால் சந்திரிகா ஒரு காகிதப் புறாதான் என்பதை, நடைமுறைகள் விரைவாகவே காட்டத்தொடங்கின.

' சமாதானமே முழுமூச்சு ' என்று பேசி வந்த சந்திரிகாவின் குரலில், படிப்படியாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. சமாதானக் குரலில் முதலாவது மாற்றம் இவ்வாறு ஏற்பட்டது -

" சமாதானம் வேண்டும்தான்; அதற்காக எதையும் கொடுத்துச் சமாதானம் காணவேண்டும் என்றில்லை."

தமிழ் மக்களின் பிரச்சினை தீர்த்துவைக்கப்படுவதன்மூலமே சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்று கூறிவந்த சந்திரிகாவின் குரலில், பின்வருமாறு மாற்றமேற்பட்டது.

" சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதிக்காத வகையிற்தான் தமிழ் மக்களின் உரிமை வழங்கப்படும்."

உண்மையில், ' தமிழ் மக்களை ஒடுக்குவதுதான் சிங்கள மக்களின் உரிமை ' என்ற பழைய பல்லவிக்குச் சந்திரிகா திரும்பிவிட்டார் என்பதை, இது தெளிவாக்கியது.

' இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வல்ல, அரசியற் தீர்வுதான் காணப்படவேண்டும் ' என்று பெரிதும் கூறிவந்த சந்திரிகாவின் குரலில் தெளிவான மாற்றம் பின்வருமாறு ஏற்பட்டது.

" அரசியற் தீர்வு காணப்படும்; அல்லது இராணுவத் தீர்வு காணப்படும்."

" இராணுவத் தீர்வு மூலமாகவேனும் சமாதானத்தை நிலைநாட்டுவோம்."

இராணுவத் தீர்வல்ல அரசியற் தீர்வுதான் என்று முதலில் கூறிவந்த சந்திரிகா, ஆரம்பத்திலிருந்தே இராணுவ ரீதியிலான நோக்கு நிலையிலிருந்துதான் நடைமுறையிற் செயற்பட்டார் என்பதைப் பல ஆதாரங்கள் தெளிவாக்குகின்றன.

சமாதானத்தை இராணுவ ரீதியாகச் சிந்தித்தபடியால்தான், பூநகரி - சங்குப்பிட்டி இராணுவ முகாமை அகற்றுவதில்லை என்பதில் விடாப்பிடியாகச் செயற்பட்டார்.

மேலும். ஐ. தே. க. அரசாங்கம் ' பாதுகாப்புச் செலவினத்திற்கு' ஒதுக்கிய நிதியைவிட, சந்திரிகா அரசாங்கம், மேலும் நூறுகோடி ரூபாவை அதிகமாக ஒதுக்கியது. சிங்களவரின் அகராதியில் " பாதுகாப்பு " என்பது ' தமிழரை அழிப்பது ' என்பதுதான்!

பொருளாதாரத் தடையை நீக்க அவருக்கு கால அவகாசம் தேவைப்பட்டது; அதை மீண்டும் அமுல்படுத்த அவருக்கு அது தேவைப்பட்டிருக்கவில்லை! பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதற்கான அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரிக்க சந்திரிகா தயங்கினார்; ஆனால், மீண்டும் பொருளாதாரத் தடை என்ற அறிவித்தலை, உடனேயே வர்த்தமானியில் பதித்து பிரகடனப்படுத்திவிட்டார்! ○

www.eelamview.com

www.eelamview.com



# சகோதரிகளையிட்டு சஞ்சலமடையும் "சங்காய்" கலம்

**19. 04. 95 அன்று திருமலைத் துறைமுகத்துள், 'சூரயா', 'ரணசுறு' அதிவேகப் பீரங்கிப்படகுகள் தகர்க்கப்பட்டபோது, அதே இறங்குதுறையில் தரித்துநின்று மயிரிழையில் தப்பிப் பிழைத்த, 'ஜகதா' என்ற பெயருடைய அதிவேக பீரங்கிப்படகு, தனது உடன்பிறப்புகளின் சோகக்கதையை கண்ணீர்மல்க இங்கு விபரிக்கிறது.**

*2* ஆம் உலகப்போர் முடிவுற்ற பின்னர், சீனாவில் உள்ள மிகப் பிரபல்யமானதும் கைத்தொழிலில் மாபெரும் வெற்றியைச் சீனாவுக்கு ஈட்டிக்கொடுத்த நகரமுமான 'சங்காய்' இல் அமைந்துள்ள கப்பல் கட்டும் நிறுவனமானது, என்னையும் எனது உடன்பிறப்புகள் பலவற்றையும், 1950 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உற்பத்தி செய்தது. சீனக் கடற்படையின் தேவைக்கேற்ப இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட எமது பரம்பரையினரில், சில மாற்றங்களையும் அந்நிறுவனம் மேற்கொண்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட எமது மூத்த சகோதரிகளுக்கு 'சங்காய் வகை - 1' எனவும், இரண்டாவது உருவமைப்பான என்னையொத்தவர்களுக்கு 'சங்காய் வகை - 2' எனவும், மூன்றாவது உருவமைப்புக்கு 'சங்காய் வகை - 3' எனவும் அந்நிறுவனம் தனது பெயரைச் சூட்டியது. இரண்டாவது வழித்தோன்றல்களாகிய என்னையும் எனது சகோதரிகளில் பலரையும், சீனக்கடற்படையின் 'நதிக் காவல் ரோந்துப் பிரிவினர்' பயன்படுத்திவந்தனர். 127 அடி நீளத்தையும் 17 அடி அகலத்தையும் கொண்ட எமது எடுப்பான தோற்றமும், 131 தொன் நிறையையுடைய எளிய உருவமும், எமது அழகினைப் பொலிவுறச் செய்தன. சீன நதிக்கரையோரத்தில் ரோந்தில் ஈடுபடும்போது, ஒரு மணித்தியாலத்தில் 29 கடல்மைல் தூரத்தைக் கடக்கக்கூடியளவு சக்தியையுடைய நான்கு டீசல் இயந்திரங்களை, நாம் எமது பிரதான இயந்திரங்களாகக் கொண்டுள்ளோம். அத்துடன், எதிரிப் படகுகளைத் தேடியழிப்புச்செய்யும் எமது விசேட பணியின் பொருட்டு, நாம் எமது பிரதான போராயுதங்களாக, முன்னும் பின்னும் ஒவ்வொரு 37 மி.மீ. இரட்டைக்குழல் சீனப் பீரங்கிகளையும் எமது மேல்தளத்தின் நடுப்பகுதியில் இடப்புறத்தில் ஒன்றும் வலப்புறத்தில் ஒன்றுமாக, ஒவ்வொரு 25 மி மீ. இரட்டைக்குழல் சீனப் பீரங்கிகளையும், கொண்டுள்ளோம். இதைவிட மேலதிக விசேட போராயுதமாக, நீருக்கடியில் உள்ள எதிரிகளையோ அல்லது அவர்களது உபகரணங்களையோ அழிப்பதற்காக, நீரடியில் வெடிக்கக் கூடிய எட்டுக் குண்டுகளையும் (Depth Charges) எடுத்துவரக் கூடிய வசதியுமுண்டு. இவ்வளவு போரியல்சார் தகைமைகளும், கம்பீரமான தோற்றமும், அதிவேகச் செயற்பாடுகளும், பார்ப்போரைச் சட்டெனக் கவரக்கூடிய கவர்ச்சியும், ஆசியாவில் உள்ள ஏனைய நாடுகளின் கடற்படையினரை எம் பக்கம் கவர்ந்திழுத்தன.

இவ்வாறு எமது கவர்ச்சியின் மீது ஆசைகொண்டவர்களில் 'சிறீலங்காக் கடற்படை' ஒன்றாகும்.

1971 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறீலங்காவில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஜே. வி. பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து, அந்நாட்டின் அப்போதைய பிரதமர் **ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க** அவர்கள், நாட்டின் முப்படைகளையும் பலப்படுத்தினார். இதன்போது அவர் சீனாவுடன் ஏற்படுத்திக்கொண்ட நல்லுறவு ஒப்பந்தத்தின் விளைவாக சீன அரசு சிறீலங்காக் கடற்படைக்கு, எனது சகோதரிகளில் ஐவரை இலவசமாக வழங்கியது. சீனப்பேரரசின் கடற்படையில் சேவையாற்றியபோது, அந்நாட்டுப் பாரிய தாய்க்கப்பல்களின் எடுபிடிகளாகவே நாங்கள் கணிக்கப்பட்டு வந்தோம். ஆனால் சிறீலங்காக் கடற்படையுடன் இணைக்கப்பட்ட பின்னர் எமது சகோதரிகளுக்கு அமோக மரியாதையும், கௌரவமும், பராமரிப்பும், பாதுகாப்பும் வழங்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்டபோதும் சிறீலங்காப் பணத்தில் எங்களது சகோதரிகள் ஒவ்வொருவரினதும் பெறுமதி, 10 கோடி ரூபா என்பதை, அவர்கள் மறக்கவில்லைப் போலும்! 1972 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையில் முற்றாக இணைந்து கொண்ட எமது ஐந்து சகோதரிகளைப் பராமரிக்கவும் பயன்படுத்தவும் இலகுவாக, 'அதிவேகப் பீரங்கிப் படகுகள் அணி' (Fast Gun Boat Squadron-FGBS) ஒன்று புதிதாகஆரம்பிக்கப்பட்டது.


ஒவ்வொரு சகோதரியினது பெயரின முதல் எழுத்துக்களையும் ஒன்றுசேர்த்தால், அது சிறீமாவோவின் கணவரது பெயரை நினைவுபடுத்தும் வகையில், திட்டமிட்டுப் பெயர் சூட்டப்பட்டிருந்தது; பெயருக்கேற்ற வகையில் தொடர் இலக்கமும் வழங்கப்பட்டிருந்தது. அவை பின்வருமாறு அமைந்தன.

S - Sooraya - P 3140 (சூரயா)
W - Weeraya - P 3141 (வீரயா)
R - Ranakamee - P 3142 (ரணகாமி)
D - Dakshaya - P 3143 (தக்ஷயா)
B - Baalawatha - P 3144 (பாலவத்த)

காலப்போக்கில் எம் சகோதரிகளின் இலக்கம் மாற்றப்படவேண்டிய தேவைகருதி, அவற்றின் இலக்கங்கள் முறையே P310, P311, P312, P313, P314 என அமைந்தன. இவ்வாறு தமக்கென ஓர் இடத்தை சிறீலங்காக் கடற்படையில் பிடித்துக்கொண்ட எமது சகோதரிகளது பிரதான கடமையாக, இலங்கைத்தீவைச் சூழ ரோந்தில் ஈடுபடுதலைக் குறிப்பிடலாம். ஒரு தீவைப் பொறுத்தவரை அதனது 'முன்னணிப் பாதுகாப்பு எல்லை' கடலாக இருக்கிற காரணத்தினால், இக்கடலெல்லையைப் பாதுகாக்கும் எமது சகோதரிகள், சிறீலங்காவின் காவல் தெய்வங்களாக விளங்கினர். இதனால் இவர்கள் பெருமையும் தலைக்கனமும் கொண்டு, சிறீலங்காக் கடற்பரப்பில் பயணத்தை மேற்கொள்ளும் சகல கலங்களுக்கும் மிரட்டல்காரிகளாக விளங்கினார்கள். சிறீலங்காக் கடற்படை வீரர்களில் 30 - 35 பேர்கொண்ட 'கப்பல் குழுவினர்' எமது ஒவ்வொரு சகோதரியிலும் வசித்துக்கொண்டு, தமது கடமைகளை மேற்கொள்வார்கள். இவர்கள் அனைவரையும், என்னையும் நெறிப்படுத்தும் கப்பலின் 'ஆணையிடும் அதிகாரி'யாக 'லெப்ரினன்ற் கொமாண்டர்' தரத்தையுடைய அதிகாரியொருவர் பணியாற்றுவார். இப்பதவியை இராணுவத்தில் 'மேஜர்' என்ற பதவிக்கு இணையானதாகக் கொள்ளலாம். தற்கொலைத் தாக்குதல் ஒன்றின் மூலம் கொல்லப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் **கிளான்சி பெர்னாண்டோ**, மற்றும் அராலிக் கண்ணிவெடியில் கொல்லப்பட்ட வடபகுதிக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் **மொஹான் ஜயமஹா** உட்பட, தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் **மொஹான் சமரசேகரா** போன்ற தளபதிகள் எமது ஆணையிடும் அதிகாரிகளாவார்கள். அதுமட்டுமின்றி சிறீலங்காக் கடற்படையினருக்கு எதிராக மிகவும் துணிச்சலோடும் தியாகத்தோடும் போராடிவரும் 'கடற்புலிகள்', எமது ஒன்றுவிட்ட - உடன்பிறவாச் சகோதரியான 'சாகரவர்த்தனா'வை சென்ற வருடம் தாக்கியழித்தபோது அதன் கப்டனாக இருந்து, கடற்புலிகளால் கைது செய்யப்பட்ட கொமாண்டர் **அஜித்குமார போயகொடகூட**, 1987ஆம் ஆண்டு, எனது சகோதரியான 'வீரயா'வை வழிநடாத்தியுள்ளார்.

இவ்வாறு சிறீலங்காக் கடற்படையில் சேவையாற்றி வரும்போது, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெவ்வேறு விபத்துக்களில் இரண்டில், எமது சகோதரிகளான 'தக்ஷயாவும்', 'பாலவத்தவும்' கடும் சேதத்திற்குள்ளாகி, 1979 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறீலங்காக் கடற்படையில் இருந்து விலக்கப்பட்டுக் கைவிடப்பட்டனர். எமது சகோதரிகளில் இருவரை இழந்ததையிட்டு நாம் பெரும் சோகமுற்றோம். இவர்களது இழப்பானது சிறீலங்காக் கடற்படைக்குப் பெரும் இடையூறாக இருக்கவே, 1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், அவர்களது இடத்தினை ஈடுசெய்யும் பொருட்டு, சிறீலங்கா அரசு என்னையும் ஒரு சகோதரியையும் 20 கோடி ரூபா பணம் கொடுத்து, சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்டது. இந்தக் கொள்வனவின்போதுதான் நான் சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமானேன். எம்மையும் அதே அணியில் இணைத்த சிறீலங்காக் கடற்படை, 1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிறீலங்காவின் அரசுத் தலைவராக இருந்த **ஜே. ஆர். ஜெயவர்த்தனா**வின் ஞாபகார்த்தமாக, அவரது பெயரின் ஆங்கில முதலெழுத்துகளை அடிப்படையாகக்கொண்டு, எங்கள் இருவருக்கும் 'ஜகதா' (Jagatha), 'றக்ஷக' (Rakshaka) எனப் பெயர் சூட்டி, தொடர் இலக்கங்களாக முறையே P3145, P3146 எனவும் வழங்கியது. காலப்போக்கில் இவ்விலக்கமானது P315, P316 என மாற்றம் செய்யப்பட்டது. எனவே சங்காயின் இரண்டாவது வழித்தோன்றல்களில், மொத்தம் ஐந்துபேர் மட்டுமே கடற்படைக்குச் சேவையாற்றி வந்தோம். எங்கள் ஐவருள்ளும் வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் நெடுங்காலமாகப் பணியாற்றிய சகோதரிகள் 'சூரயா' உம் 'வீரயா' உம் ஆவார்கள். 1983 இல், வடபகுதியில் விடுதலைப் போர் தீவிரமடையத் தொடங்கிய பின், வடபகுதிக் கடலில் பயணம் செய்யும் அநேக படகுகள், இவ்விரு சகோதரிகளினாலும் தாக்குதலுக்குள்ளாகின. இதனால், இவ்விரண்டு சகோதரிகளும் அவர்கள் மத்தியில் பயத்தையும், பகைமையையும் உருவாக்கி மிகவும் பிரபல்யமடைந்தனர். சுருக்கமாகச் சொல்லப்போனால், சிறீலங்காவுடன் ஒன்றாக இருந்து தற்போது பிரிந்துபோகும் தறுவாயில் உள்ள வடக்கு - கிழக்குப் பகுதிக் கரையோர மக்கள் அனைவருக்கும், 'வீரயா'வும், 'சூரயா'வும் பழக்கப்பட்டு, பின் ஒன்றாகச் சேர்ந்து "வீரயா சூரயா" ஆகத் திரிபடைந்திருந்தன. இது நட்பு ரீதியில் இல்லாமல் பகைமையில் உண்டான உறவு என்பதுதான் எமக்குக் கவலைதரும் விடயமாகும்; இதற்கு எம்மை வழிநடாத்திய கடற்படையினரே பொறுப்பானவர்கள்.

விடுதலைப் போர் ஆரம்பித்து சில ஆண்டுகளின் பின், சிறீலங்காக் கடற்படைக்கு எதிராக 'கடற்புலிகள்' எனும் சிறப்புமிக்க அணி உருவானது; அது சிறீலங்காக் கடற்படைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதனை உணர்ந்த சிங்களக் கடற்படையானது, 1991 இல், சங்காயின் மூன்றாவது வழித்தோன்றலான 'சங்காய் வகை - 3' என்ற எமது சகோதர இனத்தினருள் மூவரை, ஒவ்வொன்றும் 15 கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்தது. இவர்களையும் அதே அணியில் இணைத்து, 1991 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கையின் அரசுத் தலைவராக இருந்த ரணசிங்க பிரேமதாஸ அவர்களது ஞாபகார்த்தமாக, 'ரணசுறு' (Ranasuru), 'ரணவிறு' (Ranawiru), 'ரணரிசி' (Ranarisi) என்ற பெயர்களைச் சூட்டி, அவற்றுக்கு முறையே P320, P321, P322 என்ற இலக்கங்களையும் வழங்கியது. எமது மூன்றாவது பரம்பரைச் சகோதரிகளாகிய இவர்கள், எனது சகோதரிகளிலும்




பார்க்க 7 அடி நீளம் கூடியவர்கள்; ஆனால் அகலம் எனது சகோதரிகளின் அளவேயாகும். அதுமட்டுமின்றி, இதன் எடையும் 19 தொன் கூடுதலாக உள்ளது. இவற்றைத் தவிர இதன் போராயுதங்களில் 'சங்காய் வகை - 2' இல் உள்ள 25 மி. மீ. இரட்டைக்குழல் பீரங்கி பொருத்தப்பட்டுள்ள இடத்தில், சீன 14. 5 மி.மீ. இரட்டைக் குழல் பீரங்கி பொருத்தப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர செயற்திறனிலும் மூன்றாவது வழித்தோன்றல்கள் சற்று விசேட தன்மையைக் கொண்டுள்ளன,

இவ்வாறாக இலங்கையில் பெரும் புகழ்பூத்த நாங்கள், எல்லாத் தகைமைகளிலும் சிறீலங்காக் கடற்படையினருக்கு அதியுச்ச சேவையைப் புரிந்துவந்தோம்; ஒன்றைத் தவிர! அதுவென்னவெனில், எமது வடிவமைப்பானது அலைகள் அற்ற அமைதியான நீரில் பயணம் செய்வதற்கேற்றவாறே முக்கியத்துவம் கொடுத்துச் சீனாவால் செய்யப்பட்டது. அத்துடன் அதிவேகமாகச் செல்வதற்காக, நீளம் கூடுதலாகவும், அகலம் ஒப்பீட்டளவில் மிகக்குறைவாகவும் தயாரிக்கப்பட்டோம். இவ்வாறான பணிக்காகத் தயாரிக்கப்பட்ட எம்மை, சிறீலங்காக் கடற்படையினர் சில வேளைகளில், கரையில் இருந்து 19 கி. மீ. இற்கு அப்பால் உள்ள தமது 'தனிமைப்படுத்தப்பட்ட பொருளாதார வலயத்தினுள்' (Exclusive Economical Zone-EEZ) ரோந்தில் ஈடுபடுவதற்காகப் பாவிப்பார்கள். இந்தப்பகுதிக் கடலானது, அலைகளாலும் நீரோட்டத்தாலும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். இதன் காரணமாக, எனது சகோதரிகள் இவ்விடங்களில் பயணம் செய்தால், உருளுதல் (Rolling), எத்துதல்

(13 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



# தாகத்துக்குத் தண்ணீர் தேடினோம் கானல்நீரே கண்ணுக்குத் தெரிந்தது

தமிழனே !
தாகத்துக்குத் தண்ணீர் தேடினோம்.
கானல்நீரே கண்ணுக்குத் தெரிந்தது.
அமைதிக் குஞ்சுக்காக அடைவைத்திருந்தோம்.
கூட்டுக்குள்ளேயே எல்லாம் கூழாகிப் போனது.
பறந்து வந்த பருந்துக்கு விருந்து வைத்தோம்.
எச்சத்தை எம்தலையில் இட்டுவிட்டு
எழுந்து போனது.
நாகபாம்புக்கு மகுடி ஊதினோம்.
நன்றாக ஆடிவிட்டு
நச்சுப்பற்களையே நமக்குக் காட்டியது.
மரங்கள் துளிர்த்து வசந்தம் வருமெனக்
காத்திருந்தபோது
அக்கினிக் காற்றின் அனலே வீசியது.
அழகிய கனவு கலைந்து விடுமென்று
விழிமூடிக்கிடந்தோம்.
கனவு மெய்ப்படவில்லையே.
பிச்சைவாங்குவதற்குப் பேரா பேச்சுவார்த்தை
மூச்சை அறுந்துவிட்டது.
இனிநூலை விட்டுக்கொடுத்தாலும்
பட்டம ஏறாது.
மேடைக்கு புதிய நடிகைவந்தாள்;
நல்லநடிப்புடன் நாடகமாடினாள்.
கதையற்ற கலைப்படைப்பு என்பதால்
''பெரிய படிப்புக்காரி''யின் பொய்வேடம்
நீண்ட காலத்துக்கு நிலைக்கவில்லை.
இடைவேளையுடன் திரைவிழுந்தது.
ஈழத்தமிழர் ஏமாளிகள் என்றகதை
திருத்தியெழுதப்பட்டதை
அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை.
இனி அமைதிக்கு வந்த அன்னப்பறவை
குண்டு சுமந்துவந்து கொட்டும்.
கொட்டட்டும்.

## உலைக்களம்

வியாசன்

விடுதலை நாற்று
குருதி நீரிற்தான் விளையுமென்றால் ...
இரத்தம் சிந்துவதற்கு என்ன பெயர்தெரியுமா ?
வரலாற்றுக் கடமை.
உயிர்விலை கொடுத்துத்தான் உரிமைபெற முடியுமானால்
சாவுக்கு என்ன பெயர் தெரியுமா ?
தலைமுறைக்கான விலைகொடுப்பு.
நேற்று : பேச்சென்ற போது பெருமைப்பட்டவனே !
இன்று : போரென்ற போது மட்டும்
ஏன் பேசாமற் கிடக்கின்றாய் ?
உலகப் பரப்பெங்கும் ஒதுங்கி வாழும் தமிழனுக்கு
வேர்விட ஒரு விளைநிலம் வேண்டும்.
அது தமிழீழமாக அமையட்டும்.
முகவரியற்ற நாடோடிக் கூட்டமாக
தமிழன் முகமிழந்து போகக்கூடாது.
நிமிர்ந்த வாழ்வு வேண்டும்.
அது இங்கேயே முளைகொள்ளட்டும்.
சோழன் கதையும் எல்லாளன் கதையும்
மேடைக்கதைகள் ஆகக்கூடாது.
அவை நீளும் கதைகள் ஆகட்டும்.
காத்துக்கிடந்த காலம் விடிந்துள்ளது.
மூத்தமகளைக் கூப்பிட்டு முத்தமிடு.
கொற்றவையின் கோவிலுக்குக் கூட்டிப்போ.
நெற்றியில் திலகமிடு.
ஆனந்தக்கண்ணீர் வழிந்து முகம் நனைக்க
வழியனுப்பி வைத்துவிட்டு
களத்திலிருந்து வரும் செய்திக்குக் காத்திரு.
அடுத்தமகனுக்கும் அழைப்பு வரலாம்.
தாயே ! எழுந்து முற்றத்துக்கு வா.
மகளுக்கு மஞ்சள் நீராட்டு.
உதிரிப்பூவை உச்சிமுகர்.

''அரியாத்தை''யின் அடுத்த வாரிசே !
மடிசுமந்த திருமகளை வழியனுப்பிவிட்டு
வாசலிலே... காத்திரு
எதிரியை எரித்துவிட்டு திரும்பிவருவாள்
குங்குமம் கரைத்து வைத்திரு.
ஆராத்தி எடுக்க வேண்டும்.
அறுபது வயது அப்புவுக்கு......



இது அழைப்பு.
போர்முரசம் கேட்கும் பொழுதில்...... இது என்ன ?
சுருட்டா...... தூக்கி எறி...
கூச்சம் உனக்கெதற்கு ?
ஆச்சியைக் கூப்பிட்டு அணைத்தவளை முத்தமிடு.
காணி உறுதிகளைப் பேரனிடம் கையளித்து
நானிறந்தால் நீயென்று நாலூரும் கேட்கச் சொல்.
மானம்போய் .... வீரம்போய் .....
மண்டியிட்டு வாழ்வதிலும்
போராடிச்சாவதுவே பெருமைதரும்.
'அரைநாண் ' கயிற்றை அவிழ்த்துக்கட்டு
இரைதேடும் புலியாக .. எழுந்து வெளியேவா.
தங்கையே !
எங்கே போகின்றாய் ?
ரியூட்டரிக்கா ?
சந்தோசம்.
நன்றாக படித்து டாக்டராகு.
நல்லமதிப்பு வரும்
புண்ணுக்கு மருந்திடுதல் புனிதம்.
ரணப்பட்ட
மண்ணுக்கு மருந்திடவும் வேண்டும்
மறக்காதே.
பல்லக்குத் தூக்குதற்குப் படிப்பெதற்கு ?
அடிமைக்கு அறிவிருந்தும் ஆவதென்ன ?
தன்மானம் வேண்டுமடி தங்கைச்சி.
போராடிக்கொண்டு படி.
படித்துக்கொண்டு போராடு.
நில்லடா தம்பி !
உன்னை நிறுத்துவிற்றாலுங்கூட
நல்லவிலைக்கு நாளைக்கே விற்கலாம்.
பத்துப் பனைமரத்தைக் கட்டிஇழுத்துக்
கொத்தியடுக்கவல்ல... கொழுத்தபருவத்தில்
சும்மா திரிகின்றாய்
முகத்திலும் நெஞ்சிலும் உனக்கு மயிர்முளைத்ததுஏன் ?
வேண்டுமடா தம்பி வீரம்.
மானம் பெரிது.
பார் : வாசல்வரையும் எதிரி வந்துள்ளான்.
நீகுடித்த தாயின் முலையில்
தண்ணீரா இருந்தது... ?
போ ! நீயே ! புயல் ;
எழுந்து போராடு !
கதவை அகலத்திறந்து
பேச்சுக்குக் காத்திருந்தோம்.
வாசலுக்கு எவரும் வரவில்லை.
வந்தவர்களும்
பூச்சிபிடிக்கும் அதிகாரம்கூட அற்றவர்கள்
காலக்கெடு மீளக்கொடுத்தால் ..
ஜாலக்காரிக்கு...... அது வாய்ப்பாகிவிடும்.
போர்முரசு முழங்கிப் படைபுறப்பட்டாச்சு
வாழ்வதானால் எல்லோரும் வாழுவோம்.
வீழ்வதானாலும் எல்லோரும் வீழுவோம்.
இரண்டுக்கும் வரலாறு இருக்கும்
எவனாவது எழுதுவான்.


www.eelamview.com

www.eelamview.com



# இரண்டாம் ஈழப்போர்

## தரைத் தாக்குதல்கள் - கடற்சண்டைகள் - புலனாய்வுச் சமர்கள் நிறைந்த ஒரு பொருது களம்



'இரண்டாவது ஈழப்போரின்' ஆரம்ப கட்டமும் - இறுதிக் கட்டமும் சமாதானப் பேச்சுக்களால் அரண்செய்யப்பட்டுள்ளன. ஆயினும், தமிழீழ மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றெடுத்துவிடுவதற்கான முயற்சிகளாகவே, போரையும் - பேச்சுவார்த்தைகளையும் புலிகள் இயக்கம் கையாண்டிருக்கிறது.

இராணுவ ரீதியிலும் சரி சித்தாந்த ரீதியிலும் சரி, புலிகள் இயக்கத்தின் ஆணிவேரை-விடுதலைப் போரின் நியாயப்பாட்டை - இரண்டாம் ஈழப்போரின் விளைவுகள் பலப்படுத்தி உள்ளன. குறிப்பாக புலிகள் இயக்கத்திற்கும் - சந்திரிகா அரசிற்கும் இடையில் நடந்து படுதோல்வியுடன் முடிவடைந்திருக்கும் தற்போதைய பேச்சுவார்த்தை, விடுதலைப் போருக்கு ஒரு வலுவான சித்தாந்த நிலைப்பாட்டை வழங்கியுள்ளது. அதாவது, பழைய சிங்களத் தலைமைகள் மட்டுமல்ல, புதிய சந்ததியைத் தலைமைத்துவ சக்தியாகக்கொண்ட சிங்கள அரசாங்கங்களும் தமிழரின் அரசியல் உரிமைகளைச் சமாதான வழிமுறையில் வழங்க முன்வராது என்பதே அதுவாகும்.

'இரண்டாவது ஈழப்போர்' எந்தவகையில் எமது விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமாக முடிந்துள்ளது என்ற கேள்விக்கு விடையளிப்பது சுலபம். தேசிய பலத்திலும் அரசியல் சித்தாந்த நிலையிலும், அரசு இயந்திர உருவாக்கத்திலும் போராட்டம் பாரிய வெற்றிகளைப் பெற்றுள்ளது. ஆயினும் தமிழரின் பொருளாதாரம் என்ற விடயத்தில், போர் மற்றும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள் காரணமாக வீழ்ச்சிநிலை இருந்தபொழுதிலும், ஒரு தேசியப் பொருளாதாரம் சம்பந்தமான உணர்வு நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. இந்த மாற்றமானது. முன்சொன்ன மூன்றுவகை வெற்றிகளுடனும் இணைத்து நான்காவது வெற்றியாகச் சொல்லப்படக்கூடியதே. இனப்படுகொலை என்ற விடயத்தில், சிங்களப் படைகளினது மூர்க்கத்தனம் காரணமாக, தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார்கள். இதை சிங்களப் பேரினவாதம் தான் பெற்ற வெற்றியாகக் கருதக்கூடும்.

1990 யூன் 10ஆம் திகதி மட்டக்களப்பில் தொடங்கிய இரண்டாவது ஈழப்போர், 28 டிசெம்பர் 1994 அன்று இரவு, மட்டக்களப்பிலேயே முடிவடைந்தது. ஏறக்குறைய 4½ வருடங்கள் தொடர்ந்து நடந்த இந்த 'இரண்டாவது ஈழப்போரை', சிறீலங்கா தரப்பில், இரண்டு ஜனாதிபதிகள் (பிரேமதாசா, விஜயதுங்கா) தலைமை ஏற்று நடாத்தி உள்ளனர். இந்தப் போரை வெல்வதற்காக, சிங்கள அரசு தனது முழுப்பலத்தையும் (ஆள், ஆயுதம், தந்திரோபாயங்கள்) பயன்படுத்தியிருந்தது.

88 கடற் போர்க்கலங்கள், 85 விமானங்கள் (உலங்கு வானூர்திகள் உட்பட), மற்றும் டாங்கிகள் - ஆட்டிலறிகள் போன்ற கனரக ஆயுதங்களுடன், ஒரு இலட்சம் சிங்களப் படையினர் 'இரண்டாவது ஈழப்போரில்' ஈடுபடுத்தப்பட்டனர். இதில் 15 கடற் போர்க்கலங்கள், 8 விமானங்கள் என்பவற்றுடன், 8000 சிங்களப் படையினரையும் அரசு இழந்துள்ளது. அத்துடன் 5000இற்கும் மேல் அங்கவீனர்கள் ஆக்கப்பட்டு, போர்க்களத்தைவிட்டு அப்புறப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதேவேளை, புலிவீரர்களின் போர்த்திறனுக்குப் பயந்து, 25,000 சிங்களச் சிப்பாய்கள் படையை விட்டு ஓடியுள்ளனர். படையை விட்டோடிய இந்தப் படை அணியின் எண்ணிக்கை, புலிகள் இயக்கத்தின் மொத்த ஆள் எண்ணிக்கையைவிட அதிகமானது. அதாவது, இலங்கைத் தீவில், ஆட்தொகையில் கூடிய இரண்டாவது பெரிய படையாக இந்த ஓடிய படை விளங்குகின்றது. 'இரண்டாவது ஈழப்போரில்' சிங்களப் படை சந்தித்த இராணுவ இழப்புக்களை வீதாசாரத்தில் கணிப்பிட்டுப் பார்த்தால், அது அரசியல் ஆய்வாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும். அதாவது, சிங்களப் படையின் மொத்த ஆள் எண்ணிக்கையில் 40 வீதத்தை - இரண்டாவது ஈழப்போரின்போது - சிங்களப் படை இழந்துவிட்டது என்ற உண்மை, பேரினவாத பூதத்தை உலுக்கி எடுத்திருக்கும்.

இதேவேளை, தமிழரின் படை பலம் என்பது, வியக்கத்தக்க அளவிலும் - இறுதி வெற்றி தொடர்பான நம்பக்கையைப் பலப்படுத்தக்கூடிய விதத்திலும் வளர்ந்துள்ளது.

சிங்களப் படையின் பாரிய இராணுவ முகாம்கள் பல தாக்கி அழிக்கப்பட்டுள்ளன; அதன் 'டாங்கிப்படை' பலத்த இழப்பைச் சந்தித்துள்ளது; மரபுவழிப் போர்முறையில் சிங்களப் படை வைத்திருந்த மேலாதிக்கமும் சிதறடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தரையிலிருந்து கடலுக்கு, முதற்தடவையாக போர் விஸ்தரிக்கப்பட்ட காலப்பகுதியாகவும் 'இரண்டாவது ஈழப்போர்' அமைந்துள்ளது.

'இரண்டாம் ஈழப்போரின்' ஆரம்ப கட்டத்தில், புலிகளே போரில் மேலாதிக்கம் செலுத்தி வந்தனர். வேகமும் - வீரமும் ஒருங்கிணைந்த புலிகளின் தாக்குதற போர்முறையால், ஆரம்பத்தில், சிங்களப் படை பலத்த உயிரிழப்பைச் சந்தித்தது. ஆயினும், 1991ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இராணுவ மேல்நிலைக்கான ஒரு பலத்த போட்டி நிலவியது. சிங்களப் படையானது தனது ஆள் எண்ணிக்கையை அதிகரித்துவிட்டு - ஆயுத பலத்தையும் பெருக்கி விட்டு-புதிய வேகத்துடன் போரில் குதித்தது. இந்தப் புதிய நிலைக்கு முகங்கொடுத்து, தொடர்ந்தும் போரில் முன்னணிப் பாத்திரத்தை வகிப்பதற்காக, தலைவர் பிரபாகரன் அவர்கள், அல்லும் பகலும் பாடுபட்டார்; புலிவீரர்களின் இராணுவ ஆற்றலை விருத்திசெய்தபடி - புதிய புதிய படை அணிகளை உருவாக்கிப் பயிற்றுவித்து - போரில் இறக்கினார். சாள்ஸ் அன்ரனி படை அணி, இம்ரான் - பாண்டியன் படை அணி, விவேகன் படை அணி, ஜெயந்தன் படை அணி...... என்பவற்றுடன் வேவுப் படை அணி ஒன்றையும் உருவாக்கி, போரில் மேலாதிக்கம் பெற முயற்சி செய்தார். இதேவேளை, பல்வேறுவகைப்பட்ட தாக்குதற் தந்திரோபாயங்களையும் வகுத்து, இராணுவக் கல்வியைப் போராளிகளுக்கு ஊட்டி அவர்களின் போர்த்திறனை அதிகரித்தார்.

தலைவரின் முயற்சி பயன்தரத் தொடங்கியது. சிங்களப் படைநிலைகள் மீதான பெருந் தாக்குதல்கள் பெரு வெற்றிகளைத் தந்தன; மரபுவழிப் போர்முறையைப் பயன்படுத்தி சிங்களப் படைகள் செய்த 'வன்னி விக்ரம', 'மின்னல்' போன்ற பல இராணுவ நடவடிக்கைகளுக்கு புலிவீரர்கள் வெற்றிகரமாக முகங்கொடுக்கத் தொடங்கினர். 'ஒப்பறேசன் யாழ் தேவி'யைத் தடுத்து நிறுத்திய முறியடிப்புத் தாக்குதலும், பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான 'தவளை' நடவடிக்கையும், தலைவரின் முயற்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய அறுவடைகளாக மாறின. இவற்றின்மூலம், அசைக்க முடியாத ஒரு இராணுவ மேலாதிக்கத்தைப் புலிகள் இயக்கம் பெற்றுக்கொண்டது.

தரைப்போரில் புலிகள் இயக்கம் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை, கடற்போரிலும் சிங்களக் கடற்படையைப் புலிகள் திணறடித்தனர்.

ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து, யாழ். குடாநாட்டைச் சூழ ஒரு இராணுவ முற்றுகையைச் சிங்களப் படைகள் இட்டன. இந்த முற்றுகையை ஏதோ ஒரு வகையில் உடைத்தெறியாவிட்டால், போராட்டத் தேர் இதற்குள் சிக்குண்டு அழிந்துவிடக்கூடிய ஒரு அபாய சூழல் அன்று இருந்தது.

இந்த முற்றுகையை முறியடிப்பதற்குரிய பிரதான போர்க் கருவியாக, 'கடற்புலிகள்' அமைப்பையே தலைவர் தேர்ந்தெடுத்தார். எனவே, கடற்புலிகளைக் கட்டிவளாத்து, கடற்போரில் அவர்களை வெற்றிகரமாக இறக்கிவிட்டார். ஆழங்குறைந்த யாழ். நீரேரிக்குள் சிங்களக் கடற்படையை விரட்டியடிக்கத் தொடங்கிய கடற்புலிகள், குடாநாடு மீதான இராணுவ முற்றுகையை உடைத்தெறிந்தனர். நாட்கள் செல்லச்செல்ல ஆழ்கடலுக்குள் அடியெடுத்துவைத்து இரண்டாவது ஈழப்போரை வெற்றியை நோக்கி நகர்த்தினர். கடலிலே பல இராணுவ வெற்றிகளைப் பெற்று - கடற்படைக் கலங்களை மூழ்கடித்து - சிங்களக் கடற்படையைத் திணறடித்தனர்.

இதேவேளை இன்னொரு புறத்தில் - பொது மக்களின் கண்களுக்குப் புலப்படாத வகையில் - ஓர் இரகசியப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மோதல் தவிர்ப்பு - அமைதிப் பேச்சுக்கள் என்று, எந்த ஒரு வரையறைக்குள்ளும் அகப்படாமல், இந்த இரகசியப் போர் தொடர்ந்துகொண்டே இருந்தது. போர் நடந்தபோதும் சரி போர் ஓய்ந்த நேரங்களிலும் சரி, அது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றது. புலிகள் இயக்கத்திற்கு எதிராக - இந்திய, சிங்கள புலனாய்வு நிறுவனங்கள் நடாத்திவரும் புலனாய்வுப் போரே அந்த இரகசியப் போர் ஆகும்.

எமது விடுதலைப் போரைச் சீர்குலைக்கும் நாசகாரத் திட்டத்துடன், இந்தப் புலனாய்வுப் போரை எதிரி அரசுகள் தொடுத்துள்ளன. இந்த நோக்கத்துடன், தலைவர் பிரபாகரனது உயிருக்கு உலைவைக்கும் முயற்சிகளில், இந்திய-சிங்கள புலனாய்வு நிறுவனங்கள் அக்கறை காட்டுகின்றன.

எதிரி அரசுகளின் புலனாய்வு நிறுவனங்களும் அவர்களது உளவாளிகளும் செய்ய முனையும் சதிகள், நாசவேலைகள், ஊடுருவல்கள், காட்டிக்கொடுப்புக்கள்என்பவற்றிலிருந்துதலைவரையும் போராட்டத்தையும் பாதுகாக்கும் பெரும் பணியை, புலிகளின் புலனாய்வுத்துறையினர் வெற்றிகரமாகச் செய்துவருகின்றனர். இரு பெரும் களங்களைக்கொண்ட இந்தப் புலனாய்வுப் போரில் தற்காப்பு உத்திகளையும், தாக்கி அழிக்கும் தந்திரங்களையும், முறியடிப்பு முயற்சிகளையும் கடைப்பிடித்தபடி - தரை, கடல் போரைப் போல - இந்தப் புலனாய்வுப் போரிலும் புலிகள் இயக்கம் மேலாதிக்கத்தைப் பேணியபடி உள்ளது. புலனாய்வுப் போரில் புலிகள் பெற்ற மேலாதிக்கத்திற்கான பிரதான காரணங்களில்ஒன்று, பொதுமக்களதுபங்களிப்பாகும்.

'இரண்டாவது ஈழப்போரில்' புலிகள் பெற்ற பாரிய வெற்றிகளுக்கும் அதன்மூலம் கிடைத்த படைய மேலாதிக்கத்திற்கும் அச்சாணியாக, கரும்புலிகளே விளங்குகின்றனர். தரைப்போர்-கடற்போர்களோடு மட்டுமன்றி, புலனாய்வுப் போர்முனைகளிலும் கரும்புலி வீரர்கள் வெற்றிக்கு முடிதரித்தார்கள். ஒப்புவமை அற்ற அவர்களது ஈகமும் வீரமும் - தன்னை அழித்து இலக்கை அழிக்க முயலும் அவர்களது கடமை உணர்ச்சியும் - அர்ப்பண உணர்வும், எமது விடுதலைப் போராட்டத்தை வளர்ச்சியை நோக்கி உந்தித் தள்ளி உள்ளன.

'இரண்டாவது ஈழப்போரில்' புலிப்படை பெற்ற படைய மேலாதிக்கமும், அதன் விளைவாக சிங்களப் படைகளும் பேரினவாத சக்திகளும் சந்தித்த பேரழிவுகளும் பெருந்தோல்விகளும், சிங்கள மக்களது சிந்தனையில பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தன. இந்த மனமாற்றத்தை வாக்கு வேட்டைக்கான தூண்டிலாகப பயன்படுத்திய சந்திரிகா அம்மையார், வரலாறு காணாத பெருவெற்றியைப பெற்று ஜனாதிபதியானார். ஆனால், அவரின் உள்மனதில் இருந்த பேரினவாத சிந்தனையின் ஆதிக்கமும - அவரைச் சூழ்ந்திருந்த பேரினவாதிகளது ஆலோசனைகளும் - மற்றும் அவரது அரசியல் அனுபவமின்மையும் ஒன்று சேர்ந்து, சமாதானப்பேச்சை ஒரு சண்டையாக மாறசசெய்துவிட்டன.

தமிழரின் விடுதலைப் போரை போர்க்களத்தில் வைத்துத் தோற்கடிக்க முன்னைய அரசு முயன்றதைபபோல, பேச்சுவார்த்தை என்ற அரங்கத்துக்குள் வைத்துப் போராட்டத்தை மழுங்கடிக்க, சந்திரிகா அம்மையார் முயன்றார்; இறுதியில் 'மூன்றாவது ஈழப்போரைத்' தொடக்கிவைத்ததில்தான் அவரது முயற்சிகள் முடிவடைந்தன.

இந்த நிலையில், 'மூன்றாவது ஈழப்போருக்கான' களம் எந்த நிலையில் உள்ளது என்ற கேள்வி எழுகின்றது. தரைப்போரிலும், கடற்போரிலும், புலனாய்வுப் போரிலும புலிகள் இயக்கம் பெற்றுள்ள மேல்நிலையில் இருந்தபடி, 'மூன்றாவது ஈழப்போரில்' புலிகள் குதித்துள்ளனர். O

www.eelamview.com

www.eelamview.com



# திருக்கோணமலை மேற்கு சிங்களக் குடியேற்றம்

- சி. வரதராஜன்

அல்லை, கந்தளாய் குடியேற்றத் திட்டங்கள்மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் தென் பகுதியைச் சிங்கள மயமாக்கிய சிறீலங்கா அரசாங்கம், அதன் தொடர்ச்சியாக, திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்குப் பகுதியைச் சிங்கள மயமாக்கும் நோக்கத்துடன் பின்வரும் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

1. மொறவெவ குடியேற்றத் திட்டம்.
2. மகாதிவுல்வெவ குடியேற்றத் திட்டம்.
3. கல்மெட்டியாவ குடியேற்றத் திட்டம்.

திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கட்டுக்குளம்பற்று காரியாதிகாரிப் பிரிவில் உள்ள முதலிக்குளம், 'மொறவெவ' எனப் பெயர் மாற்றப்பட்டு, 1958 ஆம் ஆண்டில் மொறவெவ குடியேற்றத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. 1958 ஆம் ஆண்டு இக்குடியேற்றத் திட்டத்தில் 121 குடும்பங்களும், 1959 ஆம் ஆண்டு 285 குடும்பங்களும், 1960 - 1961 காலப்பகுதியில் 328 குடும்பங்களும், 1961 - 1962 காலப்பகுதியில் 224 குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன. 1977 ஆம் ஆண்டு காணி அமைச்சின் நிர்வாக அறிக்கையின்படி, 1977 ஆம் ஆண்டின் முடிவில் இக்குடியேற்றத் திட்டத்தில் 1569 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தன. இக்குடும்பங்களுக்கு 4141 ஏக்கர் நெல் நிலமும் 1562 ஏக்கர் மேட்டு நிலமுமாக மொத்தம் 5703 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருந்தது.

திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்குப் பகுதியினை சிங்கள மயமாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு குடியேற்றத் திட்டம், 'மகாதிவுல்வெவ குடியேற்றத் திட்டமாகும்.' கட்டுக்குளம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பெரியவிளாங்குளம், 'மகாதிவுல்வெவ' எனப் பெயர் மாற்றப்பட்டு, ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1981 ஆம் ஆண்டு, இக்குடியேற்றத் திட்டத்தில் குடி அமர்த்தப்படுவதற்கு 575 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டன ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2½ ஏக்கர் நெல் நிலமும் ½ ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது.


மொறவெவ குடியேற்றத் திட்டம், மகாதிவுல்வெவ குடியேற்றத் திட்டம் ஆகியவற்றின் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பெருமளவு சிங்களவர்களைக் குடி அமர்த்தியதனைத் தொடர்ந்து இப்பகுதியில். இரண்டு புதிய சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

1. மொறவெவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு.
2. கோமரங்கடவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு.

முதலிக்குளம், மொறவெவ எனப் பெயர் மாற்றம் பெற்று புதிய சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாறியது. குமரன்கடவை, 'கோமரங்கடவல' எனப்பெயர் மாற்றம் பெற்று, மற்றுமொரு புதிய சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாறியது. 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி, இவ்விரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் மொத்த சனத்தொகையின் இன வீதாசாரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | தமிழர் | | முஸ்லிம் | | சிங்களவர் | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | வீதம் | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 1. கோமரங் கடவல | 28 | 0.4 | 9 | 0.1 | 7058 | 99.5 |
| 2. மொறவெவ | 3350 | 36.1 | 815 | 8.8 | 5101 | 55.0 |
| மொத்தம் | 3378 | 20.6 | 824 | 5.0 | 12158 | 74.3 |

தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிங்களக் குடியேற்றத் திட்டமே கல்மெட்டியாவ குடியேற்றத் திட்டமாகும். கல்மெட்டியாக் குளம் என்பது, 'கல்மெட்டியாவ' எனப் பெயர் மாற்றப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டத்தின்மூலம், தம்பலகாமம் பிரதேசத்தினைச் சிங்களமயமாக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டது. 1968 / 1969 காலப் பகுதியில் கல்மெட்டியாவ குடியேற்றத் திட்டத்தில் 212 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. இவற்றுக்கு 636 ஏக்கர் நெல்நிலமும் 386 ஏக்கர் மேட்டுநிலமுமாக, மொத்தம் 1022 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இக்குடியேற்றத் திட்டத்தின் மூலம் தம்பலகாமத்தின் வடக்குப் பிரதேசத்தில், பெருமளவு சிங்களவர்கள் குடியேறலாயினர். 1901 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது, தம்பலகாமம் வடக்குப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகையான 741 பேரில், 721 பேர் தமிழர்களாயும் 17 பேர் சிங்களவர்களாயும் 3 பேர் முஸ்லிம்களாயும் இருந்தனர். இதன்படி 1901 இல் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 97.3 சதவீதத்தினர் தமிழர்களாயும், 2.3 சதவீதத்தினர் சிங்களவர்களாயும், 0.4 சதவீத்தினர் முஸ்லிம்களாயும் இருந்தனர். ஆனால் 1971 ஆம் ஆண்டுக் குடிசனமதிப்பீட்டின்படி, தம்பலகாமம் வடக்கு பிரதேசத்தின் மொத்த சனத்தொகையான 8319 பேரில், 3232 பேர் தமிழர்களாயும் 2774 பேர் சிங்களவர்களாயும் 2312 பேர் முஸ்லிம்களாயும் இருந்தனர். எனவே, 1901 - 1971 காலப் பகுதியில், இப்பிரதேசத்தில் தமிழர்களின் தொகை 348 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்திருக்க, சிங்களவர்களின் தொகை 16218 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக 1901 - 1971 காலப் பகுதியில், தம்பலகாமம் வடக்குப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 973 சதவீதத்திலிருந்து 38.9 சதவீதமாக வீழ்ச்சியடைய, சிங்களவர்களின் பங்கு 2.3 சதவீதத்திலிருந்து 33.3 சதவீதமாக அதிகரித்திருந்தது. எனவே 1901 இல் இப்பிரதேசத்தில், ஒவ்வொரு 100 தமிழருக்கும் ஏறத்தாழ 2 சிங்களவர்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் 1971 இல், ஒவ்வொரு 100 தமிழருக்கும் 86 சிங்களவர்கள் இருந்தனர். இவ்வாறு தம்பலகாமம் வடக்குப் பகுதி சிங்களமயப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 1976 ஆம் ஆண்டு, சேருவல என்ற சிங்களத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டபோது, கண்டி - திருக்கோணமலை வீதிக்குக் கிழக்கேயுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய தம்பலகாமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேசங்கள், இச்சிங்களத் தேர்தல் தொகுதிக்குள் சேர்க்கப்பட்டன.




திருக்கோணமலை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொறவெவ, மகாதிவுல்வெவ, கல்மெட்டியாவ ஆகிய சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் இம்மாவட்டத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள தம்பலகாமம், மொறவெவ(முதலிக்குளம்), கோமரங்கடவல (குமரன்கடவை) ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக மாற்றப்பட்டனர். இம் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பிரதேசங்களில், 1901 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது. 1071 தமிழர்களும் 642 சிங்களவர்களும் 12 முஸ்லிம்களும் இருந்தனர். ஆனால் 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது இப்பிரதேசங்களில், 9676 தமிழர்களும் 18712 சிங்களவர்களும் 8816 முஸ்லிம்களும் இருந்தனர். எனவே 1901 - 1981 காலப்பகுதியில், இப்பிரதேசங்களின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 61சதவீதத்திலிருந்து 26 சதவீதமாக வீழ்ச்சியடைய, சிங்களவர்களின் பங்கு 36 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக அதிகரித்து, இப்பிரதேசத்தின் பெரும்பான்மையினராகச் சிங்களவர் மாறினர். எனவே மொறவெவ, மகாதிவுல்வெவ, கல்மெட்டியாவ ஆகிய குடியேற்றத் திட்டங்களின் விளைவாக குமரன் கடவை, முதலிக்குளம், தம்பலகாமம் வடக்கு ஆகிய பிரதேசங்கள் சிங்கள மயப்படுத்தப்பட்டன. இதன்மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 25 சதவீதம் சிங்கள மயமாகியது. ○

**மொறவெவ, மகாதிவுல்வெவ, கல்மெட்டியாவ ஆகிய குடியேற்றத் திட்டங்களின் விளைவாக குமரன் கடவை, முதலிக்குளம், தம்பலகாமம வடக்கு ஆகிய பிரதேசங்கள் சிங்கள மயப்படுத்தப்பட்டன. இதன்மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 25 சதவீதம் சிங்கள மயமாகியது.**

## சகோதரிகளையிட்டு...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(Pitching) ஆகிய செயற்பாடுகளால் சமநிலை குலைந்து, எம்மில் வசிக்கும் கடற்படையினருக்கு ஆபத்தைக்கூட விளைவிப்பார்கள்; சில வேளைகளில் எனது சகோதரிகள் முழுமையாக தலைகீழாகக் கவிழவும் (Capsize) சந்தர்ப்பம் உண்டு. இதுவொன்றே எமது பயன்பாட்டில் சிறீலங்காக் கடற்படையினர் எதிர்நோக்கும் முக்கிய குறைபாடாகும். இதன் விளைவாகவே எனது சகோதரிகளான 'ரணகாமி', ''பாலவத்த' ஆகியோர் விபத்தைச் சந்திக்க நேர்ந்தது.

இவ்வாறு சிறீலங்காக் கடற்படைக்குச் சேவையாற்றி வரும்போது - 19.04.1995 அன்று அதிகாலை, திருக்கோணமலைத் துறைமுகப் பகுதிக்குள் நாங்கள் நின்றுகொண்டிருந்தபோது, கடல் அடியில் முழக்கம் கேட்டது. 'ரணசுறு', 'சூரயா' என்ற இரு சகோதரிகளும் கடலில் மூழ்கிவிட்டனர்; 'ஜகதா' என்ற பெயருடைய நான் மட்டும் தப்பிக் கொண்டேன். கடல் தெய்வம் என்ற ஒன்று இருக்கின்றது எனில், அதனிடம், கடற் கரும்புலிகளிடமிருந்து என்னைப் பாதுகாக்க வரம் கேட்கின்றேன்! ○

www.eelamview.com

www.eelamview.com



# தேசத்தின் குடிமக்களுக்கோர் பகிரங்க அறைகூவல்!

மீண்டும் போர் மூண்டுவிட்டது; உலகம் வியக்கும் வெற்றிகளோடு, மீண்டும் யுத்தம் தொடங்கிவிட்டது; நிலம், கடலோடு வானிலும் ... எங்குமே ; பகைவன் கால் வைத்த இடங்களிலெல்லாம் களம் திறந்துவிட்டனர் புலிகள்; உங்கள் பிள்ளைகள்!

இந்த வேளையில் - ஒவ்வொரு தமிழனையும் அல்லது தமிழச்சியையும், தாயகத்தின் சுதந்திரத்திற்கான இந்த உச்சப் போரில் இணையுமாறு கோருகின்றோம். தனது மடியில் பிறந்த ஒவ்வொரு தனியனிதனையும நோக்கி எங்கள் தாய்த்திருநாடு போர்க்குரல் எழுப்பி அழைக்கின்றது; புறப்படுங்கள்!

இது போருக்கான அழைப்பு! யுத்தத்திற்கான அறைகூவல்!! ஒருவர்கூட மிச்சமின்றி அத்தனை பேருமே புறப்படுங்கள். ஏனெனில், இதுதான் இறுதிப் போராகவும் இருக்கலாம்; இனித் தமிழீழம்தான். இன்று வரை நாங்கள் தரைப்பகுதிகளை மீட்கவே போராடினோம்; இன்றிலிருந்து நாங்கள் தமிழீழத்தையே மீட்டெடுக்கப் போராடுவோம். அனைவருமே அணி திரள்க.

**விடுதலைக்காக உழைத்தல் என்பது ஒரு தேசியக்கடமை;**
**தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்குமே அதில் பங்குண்டு.**

தேசத்தின் இளம் புதல்வர்களே! மண்ணின் புதிய சந்ததியே!

எங்களுடைய நாட்கள், வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலகட்டம்; தமிழரின் சரித்திரத்திலேயே அதி சிறப்புவாய்ந்த ஒரு காலப் பகுதி இது. பழம்பெரும் பாரம்பரியப் பெருமைகள் நிறைந்த எங்கள் இனம், தனக்கென ஒரு அரசை நிறுவப் போர்செய்கின்ற ஒரு பொற்காலத்தில் பிறந்ததும், வாழக்கிடைத்ததும் எமது தலைமுறை பெற்ற ஒரு பெரும் பேறு என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த நேரத்தில் - இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் எங்களால் ஆற்றக்கூடிய ஆகக் கூடுதலான தேசப்பணியை வழங்குமாறு, வரலாறு எங்களை அழைக்கின்றது.

எங்களைப் பெற்றெடுத்த அன்னை நிலம் - ஒரு தமிழனாக அல்லது தமிழச்சியாகப் பிறந்தற்கான கடமையைச் செய்யுமாறு - எங்கள் ஒவ்வொருவரது மனச்சாட்சியை நோக்கியும் அறைகூவல் விடுக்கின்றது.

எமது நிலம், எமது இனம், எமது மொழி, எமது பண்பாடு, எமது கலை, எமது பாரம்பரியம், எமது விழுமியங்கள்; எமது வீரம் ... இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்தமான பாதுகாவலர்களாக - அழிவின் விளிம்பிலிருந்து இவை அனைத்தையும் மீட்டெடுக்கும் இரட்சகர்களாக - சரித்திரம் எமது சந்ததியைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது.

எமது மக்களின் வாழ்வியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும், எமது தேசத்தின் போரியல் பலத்தை உறுதிப்படுத்தும், எமது இனத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியம். எமது தலைமுறைக்குத்தான் கிடைத்துள்ளது; இது ஒரு சரித்திரப் பெருமை,

தமிழினத்துக்கென்றொரு தனி இராச்சியத்தை நிர்மாணிக்கும் வரப்பிரசாதத்தை - வரலாற்றுப் பணியை - எமது சந்ததிதான் பெற்றுள்ளது. இது ஒரு சாதாரண விடயமல்ல.

இன்றைய காலம் எங்களுடையது; இந்தப் புதுயுகத்தின் நாயகர்கள் நாங்களே தான்.

நாங்களே எம் தேசத்தின் பலம்; நாங்களே எம் இனத்தின் மீட்சி; நாங்களே எம் மக்களின் சுபீட்சம். இதுதான் எமது தலைமுறையின் உன்னதம்.

எமக்கு முன்னால் வாழ்ந்துவிட்டுப்போன எந்தச் சந்ததிக்கும், எமக்குப் பின்னால் வாழப் போகின்ற எந்தச் சந்ததிக்கும் கிடைக்காத - கிடையாத - ஒரு பெரும் பேறு, எமது சந்ததிக்குக் கிடைத்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த சந்ததி மீதும் நாம் சுமத்த வேண்டாம்; மாறாக, எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்கட்டும்.

எனவேதான், அத்தனை பேருமே யுத்தத்திற்குப் புறப்படுங்கள்!

விடுதலைக்காக உழைத்தல் என்பது ஒரு தேசியக் கடமை; அதில் ஒவ்வொருவருக்குமே பங்குண்டு. அது, ஒட்டுமொத்தமாக எங்கள் இனத்திற்கு உள்ள ஒரு கூட்டுப் பொறுப்பு. தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரின் மீதும் வரலாற்றின் நிர்ப்பந்தமாக இது உள்ளது. இந்தத் தேசியக் கடமையை எம்மில் எவருமே தட்டிக் கழித்துவிட முடியாது; தலையாய பணியாக ஏற்று, அதனை ஆற்றி முடிக்க வேண்டிய கடபபாடு, எங்கள் ஒவ்வொருவரையுமேதான் சாரும்.

தேசபக்தியோடும், இனப்பற்றோடும், சுதந்திர வேட்கையோடும் அனைவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணையுமாறு நாடு அழைக்கின்றது. பகிரங்கமாக, நேரடியாக, எந்தவித மறைமுகமுமற்று வெளிப்படையாக - யுத்தத்தில் பங்கேற்குமாறு - ஒவ்வொரு பிரஜையையும் நோக்கித் தாயகம் அறை கூவல் விடுக்கின்றது.

**"இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத் தவறினால் இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள் நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிர்விலைகள், பொருளிழப்புக்கள் எல்லாமே அர்த்த மற்றவைகளாகிப் போவதுடன், நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்குள் தள்ளப்பட நேரும் எனவே தான், எல்லோரும் ஆயுதமேந்தத் தயாராகுங்கள்! போர் களத்தில் குதியுங்கள்!"**

**- தலைவர்**

புலிகள் இயக்கமே எமது முன்னணிப் படை. முழுத் தமிழினத்தின் சார்பிலும் இந்தச் சுதந்திரப் போரைத் தலைமையேற்று வழி நடாத்துகின்ற தேசியப் படை. நாங்கள் அத்தனைபேருமே புலிகளோடு அணிவகுக்க வேண்டிய வேளை இப்போது வந்துவிட்டது. 'தமிழீழம்' என்ற ஒரே இலட்சியத்தின் கீழ் முழுத் தமிழினமும் ஒன்றிணைய வேண்டியதே இன்றைய தேவை. காலத்தின் கர்ச்சனையாக அந்த அசரீரி முழங்குகின்றது.

இந்தத் தருணம் தவறவிடப்படுமானால், வரலாறு எங்களைத் தூற்றும்; சரித்திரத்தின் பழிச்சொல்லுக்கு நாங்கள் ஆளாகுவோம்.

அதனால், இன்றே எல்லாரும் போர்க் கோலம் பூணுங்கள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், போராட்டமே எம் வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எம் போராட்டமாகவும் ஆகிவிட்டது. இந்த நியதியை எம்மில் எவருமே அசட்டை செய்து ஒதுக்கிவிட முடியாது.

சுதந்திரத்தை நாங்கள் வென்றெடுக்காது போனால், அடிமைகளாக அவமானப்பட்டு வாழ வேண்டும்; கையேந்தி நின்று தலை குனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும்; படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆகவே, சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமே இல்லை.

சிங்களப் பேரினவாதப் பிசாசு இரங்கி வந்து, ஒருபோதுமே எமக்கு உரிமைகளைத் தந்துவிடப்போவதில்லை என்பதைத்தான், வரலாறு எங்களுக்குக் கற்பித்து நிற்கின்றது. எனவே, எது நடந்தாலும், யுத்தத்தில் வெல்லும் வரையும் நாங்கள் போராடுவோம்; இரத்தச் சகதியின் மீதெனிலும் நாம் தமிழீழத் தனியரசையே பிரகடனப்படுத்துவோம்.

எங்களது இலட்சியம் 'தமிழீழம்' தான்: சிங்களப் பேரினவாதத்துடன் 'சமரசம்' அல்ல. எங்களது நோக்கம் 'தனியரசு' தான்; சிங்கள ஆட்சிக்குக் கீழொரு 'சிற்றரசு' அல்ல.

ஒன்றிணைந்து போராடுவோம்; துணிந்து போராடுவோம்; இடைவிடாமல் போராடுவோம்: இலட்சியத்தை அடையும்வரையும் போராடுவோம்.

'' மற்றவர்கள் போராடுவார்கள்; அடுத்தவர்கள் சண்டை பிடிப்பார்கள்'' என்று, எமது கூட்டுப்பொறுப்பிலிருந்து எல்லாருமே விலகி விடுவோமானால், கடைசியில் எவருமே போராடப்போவதில்லை.

எதிரியின் படையில் ஆயுதபாணிகளின் மொத்தத் தொகை ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் என்பதை, நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் தமிழர் படையில் . ?

அதிநவீன ஆயுதங்களும், மிகச் சிறந்த தந்திரோபாயங்களும் இருந்தாலும் ஆட்கள் இல்லாத அவற்றால் ஏது பயன் .. ? அவை தாங்களாகச் சண்டை பிடிக்க மாட்டா என்பதை, நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எதிரியின் பலத்துக்கு மிகையான பலத்தைப் பெற்றால் மட்டுமே, போர்க்களத்தில் நாங்கள் வெற்றிவாகை சூட முடியும்; யுத்தத்தில் வென்றால் மட்டுமே எமது இனம் பய பீதியற்றும், பிரச்சினைகளற்றும் வாழமுடியும்.

எனவே, எமது தேசத்தின் படைவலுவுக்கு மேலும் பலம் சேர்க்க, நாம் ஒவ்வொருவருமே போருக்குப் புறப்படுவோம். இந்த யுத்தம், தாயக தேசத்திற்குப் பணிசெய்ய நாம் பெற்றுள்ள ஒரு மகோன்னதமான பாக்கியம்.

எமக்காகப் போராடுவோம் . ... எம் பெற்றோருக்காகப் போராடுவோம்...... எம் சகோதரர்களுக்காகப் போராடுவோம் ..... எம் பிரியமானவர்களுக்காகப் போராடுவோம் .....

எம் வீட்டுக்காகப் போராடுவோம் ..... எம் ஊருக்காகப் போராடுவோம்......எம் நாட்டுக்காகப் போராடுவோம்..... எம் இனத்துக்காகப் போராடுவோம்... ... தன்னைத் தானே ஆளுகின்ற - தலைகுனியாத - தமிழீழத்திற்காகப் போராடுவோம் ''தேசிய வீரர்கள்!'' என்று, நாளைய பரம்பரை எம் பெயர்களை உரத்துக் கூவும்.

'தமிழீழம்' - வெறும் கனவல்ல!

புயல் கிளம்பும்! நிலம் நடுங்கும்! கடல் பொங்கும்! வானம் முழங்கும்! வாயு சுழன்றடிக்கும்! பூமி பிளக்கும்!

பிரபாகரனின் படைவீரர்களாய் அணிவகுத்து நகரும்போது, அட்ட திக்கும் அதிரும்! தமிழனின் சுதந்திர வேட்கையின் சுவாலைக்குள் சிங்களம் கருகும்! இலங்கா தேசம் இரண்டாகும்! சர்வதேசமும் வழிவிடும்! தமிழர் தேசம் தனியரசாகும்!

'தமிழீழம்' - கனவல்ல; நாளைய நம் நாடு!

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com